UNIVERSITY OF ... SRI LANKA
RECEIVED
27-2-1986
PERIODICALS DIVISION

விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 28 | மாசி 14 | ஜ. ஆகி 16 | இதழ் 16
யாழ்ப்பாணம் | புதன்கிழமை | 26 2-1986

## அக்கினோ ஜனாதிபதியானார்!

### மார்க்கோஸ் நாட்டைவிட்டு வெளியேறினார்!

[மணிலா]

பிலிப்பைன்ஸ் ஜனாதிபதித் தேர்தலை அடுத்து சர்ச்சைக் குரிய மனிதராக விளங்கிய திரு. மார்க்கோஸ் நேற்றிரவு தமது குடும்பத்தினருடன் பெயர் குறிப்பிடப்படாத நாடொன்றுக்கு அமெரிக்க இராணுவ விமான மொன்றில் பயணமானதைத் தொடர்ந்து மார்க்கோஸ் அத்தியாயம் முடிவுக்கு வந்தது.

(8-ம் பக்கம் பார்க்க)

# • மன்னாரில் கண்ணி வெடி!

# இரண்டு ராணுவ ஜீப்வண்டிகள் சிக்கின!!

## பதில்தாக்குதலில் 11 பேர்காயம்; மாணவி பலி! கோயிலில்அகதிகள் தஞ்சம்!

( ஏ. வி. மாணிக்கம் )

தள்ளாடி இராணுவ முகாமிலிருந்து மன்னார் பொலிஸ் - இராணுவ கூட்டு முகாமுக்கு நேற்றுக் காலை 6-30 மணியளவில் இராணுவத்தினர் சென்றுகொண்டிருந்த இரு ஜீப் வண்டிகள் கண்ணி வெடியில் சிக்கியதால், பலத்த சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது!

இக்கண்ணிவெடியில் இறந்தவர்கள் அல்லது சாயமடைந்தவர்கள் பற்றிய விபரம் எதுவும் உடனடியாக வெளியிடப்படவில்லை.

இக்கண்ணிவெடிச் சம்பவத்தைத் தொடர்ந்து இராணுவத்தினர் 'ஆமட் கார்'களிலும், கவச வண்டிகளிலும் ரோந்து சுற்றி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்

ஹெலிகொப்டரிலிருந்தும் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

இரு முகாம்களிலிருந்தும் 'ஷெல்'கள் கிராமப்புறங்கள் நோக்கித் தீர்க்கப்பட்டன.

இத்தாக்குதலில் ஒருமாணவி பலியானார்; 11க்கு மேற்பட்டவர்கள் (ஆண்கள், பெண்கள், சிறுவர்கள்) படுகாயமுற்றனர்.

பள்ளிமுனையிலுள்ள சித்தி விநாயகர் வித்தியாலயம் பீரங்கிக் குண்டுத் தாக்குதலால் பலத்த சேதமடைந்தது.

தாக்குதல் சம்பவங்களால் பதற்றமடைந்தமக்கள் தேவாலயங்களில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

[5-ம் பக்கம் பார்க்க]

## பிரஜைகள் குழுக்களின் இணைப்புக்குழு கூடுகிறது

(யாழ்ப்பாணம்)

பிரஜைகள் குழுக்களின் இணைப்புக் குழுக் கூட்டம் முன்னர் தீர்மானித்தபடி இன்று பகல் 1-30க்கு நல்லூர் இந்து

(5ம் பக்கம் பார்க்க)

## தோட்டத் தொழிலாளர் - பொலிஸார் மோதல்! குழந்தை பலி!

[கொழும்பு]

தலவாக்கொல்லை சென். கூம்ஸ் தோட்டத்தில் பொலிசாருக்கும் தோட்டத் தொழிலாளர்களுக்குமிடையே ஏற்பட்ட மோதலையடுத்து பொலிசார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இரண்டரை வயதுப் பெண் குழந்தை பலியானது. நான்கு பேர் காயமடைந்தனர்

நேற்று முன்தினம் நடந்த இச்சம்பவத்தில்; சீருடையில் வந்தவர்கள் தொழிலாளர்கள் மூவரைக் கடத்திச்சென்றதாகவும், இவ்விஷயம் குறித்துத் தோட்டத் தொழிலாளர்கள் தோட்ட நிர்வாகி ஊடாகப் பொலிசாருக்குப் புகார்செய்ததாகவும், அதையடுத்து ஸ்த

[5 ம் பக்கம் பார்க்க]

## லகுகல சம்பவம்: சாட்சியங்களை பிரஜைகள்குழு பதிவுசெய்தது

[மட்டக்களப்பு]

அம்பாறை மாவட்டத்தில் லகுகல என்னுமிடத்தில் விவசாயிகள், தொழிலாளர்கள் படுகொலைச் சம்பவம் தொடர்பாக மட்டக்களப்பு பிரஜைகள் குழு நேற்று சாட்சிகளை பதிவுசெய்தது.

மட்டக்களப்பு பிரஜைகள் உப தலைவர் வண. பிதா சந்திரா பெர்னாண்டோ, செயலாளர் திரு சாம். தம்பிமுத்து ஆகிய இருவரும் நேற்று அக்கரைப்பற்று வை. எம் சி. ஏ. மண்டபத்தில் வைத்து சாட்சியங்களைப் பதிவுசெய்தனர்.

(8-ம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி - டிக்ஸிற் 45 நிமிட சந்திப்பு

[கொழும்பு]

ஜனாதிபதி திரு. ஜே ஆர். ஜெயவர்த்தனாவின் விசேட செய்தியுடன் இந்திய உயர் ஸ்தானிகர் திரு. ஜே. என். டிக்ஸிற் நேற்று மாலை புதுடில்லி பயணமானார்.

இந்தியாவின் பூரண உதவியுடன் இனப் பிரச்னைக்கு அமைதியான தீர்வுகாண இலங்கை விரும்புவதாக திரு டிக்

[5ம் பக்கம் பார்க்க]

## 3 லொறிகள் கடத்தப்பட்டன

[கிளிநொச்சி]

ஆனையிறவுத் தடைமுகாமில் காட்டு மரங்களுடன் மூன்று லொறிகள் இராணுவத்தால் கைப்பற்றப்பட்டன.

இவற்றில் ஒருலொறி தேங்காய்க்குள் மரத்தை மறைத்து வைத்து தடைமுகாமை கடக்கமுற்பட்டபோது கைப்பற்றப்பட்டதாம்.

## "தமிழரைக் காப்பாற்ற இந்தியா தலையிடவேண்டும்" த. ஈழ. வி.மு. வேண்டுகோள்

[சென்னை]

இலங்கையிலுள்ள தமிழ் மக்கள் பூண்டோடு அழிக்கப்படுவதிலிருந்து காப்பாற்ற இந்திய அரசு உடனடியாகத் தலையிடவேண்டும்' என்று தமிழீழ விடுதலை முன்னணி இந்திய அரசைக் கேட்டுக்கொண்டுள்ளது.

இதுசம்பந்தமாக இம்முன்

(5ம் பக்கம் பார்க்க)

## ஒரே பார்வையில் தமிழக குட்டித் தேர்தல் முடிவு




(சென்னை)

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தமிழ்நாடு நகரசபை (நகராட்சி), பஞ்சாயத்து (ஊராட்சி) சபைத் தேர்தல்களில் நகரசபைத் தேர்தல்களில் திராவிட முன்னேற்றக்கழகத்தின் கை மிகவும் ஓங்கியுள்ள அதேநேரத்தில்: பஞ்சாயத்து சபைத் தேர்தல்களில் அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் முன்னணியில் நிற்கிறது

பதினாறு ஆண்டுகளின் பின்னர் நடைபெற்ற இத் தேர்தல்களில் 65% வாக்காளர்கள் தமது வாக்குகளைப் பதிவுசெய்துகொண்டனர்.

### நகராட்சித் தலைவர் தேர்தல் (மொத்தம்: 97 தொகுதிகள்)

| | போட்டியிட்ட தொகுதிகள் | வெற்றியீட்டிய தொகுதிகள் |
|---|---|---|
| ★ தி. மு. க. | 85 | 64 |
| ★ அ.இ அ.தி.மு.க. | 62 | 11 |
| ★ இந்திரா காங்கிரஸ் | 36 | 11 |
| ★ மார்க்சிஸ்ட் கம்யூ. | 7 | 4 |
| ★ ஜனதா கட்சி | 2 | 2 |
| ★ முஸ்லீம் லீக் | 2 | 1 |
| ★ சுயேச்சை | 4 | 4 |
| ★ இந்திய கம்யூனிஸ்ட் | 4 | 0 |

### ஊராட்சித் தலைவர் தேர்தல் முடிவு

| | |
|---|---|
| ★ தி. மு.க.—மார்க் கம்யூ—முஸ்லிம் லீக்—இந்திய கம்யூனிஸ்ட் கூட்டணி | 150 |
| ★ அ. இ. அ. தி. மு. க்—இந்திரா காங்கிரஸ் | 195 |
| ★ சுயேச்சை | 28 |
| ★ ஜனதா | 04 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரிவிளம்பரம்

## விற்பனைக்கு

பூரண விளைத்திறனுடைய புதிய பம்பாய் வெங்காய விதை விற்பனைக்குண்டு. பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 257, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். [C 911]

நெல்லை க. பேரனின் முதற் பரிசுபெற்ற "விமானங்கள் மீண்டும் வரும்" குறுநாவல் இப்போது யாழ்ப்பாணத்தில் சகல புத்தகக் கடைகளிலும் விற்பனையாகிறது. பிரதி ரூ. 9-50 சதம் மட்டும். [C 459]

கொழும்புத்துறை சுவாமியார் வீதியில் வீடு கட்டக் கூடிய 1½ பரப்புக்காணி உடன் விற்பனைக்குண்டு. விளம்பர இல: C 947, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். [C 947]

## தேவை

வட்டு தொகுதியில் எப்பகுதியிலாவது சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு அல்லது குத்தகைக்கு தேவை. விளம்பர இல C-952 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். C-952

தமிழ், ஆங்கிலம் நன்கு எழுத, வாசிக்கத் தெரிந்த G.C.E, O/L, A/L.வகுப்புகளில் வர்த்தகம், கணக்கியல் படித்த பெண் கணக்காளர் தேவை. நற்சான்றுப் பத்திரத்துடன் தொடர்பு கொள்ளவும். ஞானசுரபி புத்தகசாலை, 217, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (C-953)

யாழ். நகரிலுள்ள பங்களா ஒன்றுக்கு அதை பராமரிப்பதற்கும் மற்றும் கையுதவி வேலை செய்யக்கூடியவருமாகிய ஒருவர் [ஆண்/பெண்] தேவை. வயது 45-50 உள்ளும் பங்களாவிலேயே தங்கக் கூடியவராயும் இருத்தல் வேண்டும். நட்சாட்சிப்பத்திங்களுடன் உடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: A 293, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். (A 293]

அனுபவம் திறமை உடைய கடைச்சல் தொழில் (Lethe man), Welder [வெல்டர்]. Carpenter, (தச்சுவேலை) தெரிந்தவர்கள் உடனடியாகத் தேவை. நேரில் வரவும். கடைச்சல் — வெல்டிங் தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது. பென்ரகன் பிறைவேற் லிமிட்டட், 271, கச்சேரி-நல்லூர் வீதி, நல்லூர். [C 945]

## மணப்பந்தல்

யாழ். உயர் வேளாளகுல 26வயதுடைய அமெரிக்காவில் பெற்றோர், சகோதரருடன் வதியும் பச்சைஅட்டை உடைய பெண்ணுக்கு டாக்டர், இஞ்சினியர், கணக்காளர், பகுதி கணக்காளர், விஞ்ஞான பட்டதாரிகள் தேவை. சீதனம் பேசித் தீர்மானிக்கலாம். 1, 7, 8 செவ்வாய் தோஷமுடையவர்கள் மட்டும் குறிப்புடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. C954, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். [C 954]

## இரண்டாவது நினைவஞ்சலி



### செல்வி யமுனாளினி (நிலா) பரமானந்தம்

அன்பின் நிலாவே நீ மறைந்து வருடம் இரண்டைக் கடந்தாலும் உன் நிலவுபோன்ற முகமும் புன்சிரிப்பும் என்றும் எம் நெஞ்சை விட்டு அகலாது ஓராயிரம் கதைபேச ஓடிவந்த எங்களை வெகு தூரம் விட்டு சென்று பிரிந்தனை, ஆனல் உன் நினைவு மட்டும் எம்மை விட்டுஎன்றும்அகலாது உன் ஆன்மா சாந்தி அடைய ஆண்டவனை பிரார்த்திக்கிறோம்.

உன்மறைவால் தவிக்கும்,

அம்மா, அக்கா (மாலா) அத்தான் யோகேஸ்வரன், அண்ணா நந்தன், யம்பா, கண்ணன், ரேசன், ராசு.

(மிதிலை)
கெருடாவில்,
தொண்டமானாறு.
C 876

## 2-வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு. சின்னத்தம்பி நடராஜா

மலர்வு: 25-01-1926
மறைவு: 26-02-1984

அப்பா! மரணம் தவிர்க்கமுடியாதது என்பதை மனதுபுரிந்து கொள்கிறது. இருந்தாலும் நீங்கள் இல்லாத வெற்றிடத்தை நிரப்ப இயலாமல் எங்கள் இதயங்கள் ஏங்குகின்றனவே!

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்;

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்-
3/2/1, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
(C 946)

# இன்றைய பலன்

மாதம்; மாசி
திதி: 14(1986-2-26)
திதி: துதியை மு இ வரை
நட்சத்திரம்: உத்தரம் மு.இ வரை

மேடம்; மனப்போராட்டம் அதிகரிக்கும். பிள்ளையொன்றின் உடல் நலமும் பாதிக்கப்படலாம். அமைதி அடக்கம் வேண்டும்.

இடபம்: குடும்பத்தில் குதூகல நிகழ்ச்சிகழ் இடம்பெறும். பொருளாதாரத் துறையில் நல்ல முன்னேற்றம் தென்படும். அதிகாரப் பேறுக்கும் இடமுண்டு.

மிதுனம்: துன்பத்தின் ரேகைகைள் படரும். எதிலும் தயக்கமேற்படும். கடன் தொல்லை அதிகரிக்கலாம். நிதானம் வேண்டும்.

கடகம்: குமுறும் நெஞ்சத்துடன் நாளை கடத்துவீர்கள். சிறுவிடயத்திற்குக் கூட மற்றவர்கள் குறை கூறுவார்கள். சுகாதாரமாக நடந்துகொள்ளவும்.

சிங்கம்: புரட்சிகரமான நிலையை விரும்புவீர்கள் வாழ்க்கையில் எதிர்நீச்சல் போடுவதில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள். உடல் நலத்தையும் பேணவும்.

கன்னி: உடல் நிலையில்நல்ல மாறுதல்கள் ஏற்படும். நிதி நிலையில் சற்று முன்னேற்றம் காணப்படும்.

துலாம்; இன்று எவ்விடயத்திலும் புதிய உற்சாகம் பிறக்கும். எதிர்பாராத இடத்திலிருந்து அழைப்பும் கிடைக்கலாம்.

விருச்சிகம்: முன்னேற்றத்தில் சோர்வுதென்படும் முயற்சிக்கும் விடயமொன்றில் நல்ல முடிவு கிடைக்கும். சகோதர வழிச் சுகக்குறைவும் உண்டு.

தனுசு: வாகன சுகத்துடன் வரவலும் திருப்தியுண்டு தாய் வழிச் சுகத்துடன் தனவரவும் உண்டு.


மகரம்: வசதிகள் பெருகும். வாழ்க்கையும் வளமாகும். தொழிற்துறையிலும் சிறப்புண்டு.

கும்பம்: அதிகாரக் குறைவிற்கு இடமுண்டு. அபாயகரமான தொழில்களில் ஈடுபடுபவர்கள் அதிக கவனம் செலுத்தவும். இன்று அமைதி நன்று.

மீனம்: கனிவான சம்பவங்கள் நடைபெறும். காதலர்களுக்கு கனகுஷியானதினம். திடீர் வரவும் உண்டு.

திருமலை
வே. ரவீந்திரன்

## 31-ம் நாள் நினைவஞ்சலி



### அமரர் P. S. தேவசகாயம்

தோற்றம்: 04-06-1928
மறைவு: 28-01-1986

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் இருந்து அன்புடனும், பாசத்துடனும்வாழ்ந்துஎம்மை உயரவைக்க அயராது உழைத்த எங்கள் அன்புத் தெய்வமே! மின்னுமல், முழங்காமல் சொல்லொணுத் துயரில் ஆழ்த்திவிட்டு மறைந்தீர்களே! நீங்கள் மறைந்தாலும் எங்கள் உள்ளத்தில் என்றென்றும் உறைந்திருப்பீர்கள். உங்கள்ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்ருேம்.

இறுதி மரணச் சடங்கின் போது பலவழிகளில் எமக்குதவிபுரிந்த உற்ருர், உறவினர், சகல நண்பர்களுக்கும், நலன்புரிச்சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றிசெலுத்துவதுடன் 27-02-86 அன்று நடைபெறவிருக்கும் அந்தியேட்டி கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு யாவரையும் அன்புடன் அழைக்கின்ருேம்.

அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

23, யாழ். வீதி,
யாழ்ப்பாணம்.
(C 943)

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

நீர்வேலி அகிலேசர் வளவு கனகரட்ணம் பஞ்சாட்சரம் மகள் கெங்காதேவியின் மரணசாசனமில்லா மரணச்சொத்து விடயமாக

—மரணமடைந்தவர்

மரணச்சொத்துநியாயாதிக்கம் வழக்கு இல:- 3947

தம்பு நமசிவாயம் பஞ்சாட்சரம் நீர்வேலி வடக்கு. நீர்வேலி.

—மனுதார்

எதிர்

1. க. பஞ்சாட்சரம் கைப்பெண் சரஸ்வதி
2. க. பஞ்சாட்சரம் மகள் ஜெயதேவி
3. க. பஞ்சாட்சரம் மகள் சத்தியதேவி
4. க. பஞ்சாட்சரம் இராஜயோகி
5. க. பஞ்சாட்சரம் மகள் சசிதேவி
6. க. பஞ்சாட்சரம் மகள் இரதிதேவி
7. க. பஞ்சாட்சரம் சிவயோகி எல்லோரும் அகிலேசர் வளவு, நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

—எதிர்மனுதார்கள்

மேலே உள்ள இலக்கங் கொண்ட மரணசாதன நியாயாதிக்க வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்தவரின் மரணச் சொத்தை நிர்வகிப்பதற்காக வேண்டி மேற்படி நீதிமன்றத்தில் தொகுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது

அக்கறை உள்ள ஆள் எவரும் 1986-ம் ஆண்டு பங்குனி மாதம் 04ஆம் நாளன்று முற்பகல் 9-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்ருனதாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1986ம் ஆண்டு மாசி மாதம் 14ம் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி

கு. குலசிங்கம்,
பதிவாளர்.

வரைவு:

லிங்கா துரைராஜா,
மனுதாரின் சட்டத்தரணி.
(C 886)

## பிறந்தநாள் வாழ்த்து



### கு. அனே சுஜிதன்

ஊர்காவற்றுறை, நாரந்தனை தெற்கைச் சேர்ந்த குஹநாதன்-ரஜனி தம்பதிகளின் செல்வப் புதல்வன் அனே சுஜிதன் தனது முதலாவது பிறந்த நாளை இன்று[26-02-86] தனது அம்மப்பா, அம்மம்மா ஆகியோருடன் குதூகலமாகக் கொண்டாடுகிருர், பல்கலையும் பெற்று சிறப்புடன் வாழ லண்டனிலுள்ள அப்பா, அம்மா, மற்றும் உற்ருர் உறவினர், நண்பர்கள் அனைவரும் வாழ்த்துகின்றனர். [A 260]

## அகதிச்சிறுமி மரணம்

[யாழ்ப்பாணம்]

நிலாவெளி முகாமிலிருந்து யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த அகதிச்சிறுமி மரணமடைந்துள்ளார்.

யாழ். குருசோவீதியில் வசித்துவந்த காளிமுத்து மகள் விஜயகுமாரி [12 வயது) என்பவருக்கே இக்கதி நேர்ந்தது.

மரணவிசாரணை அதிகாரி க. கேசவன் விசாரணை நடத்தியபோது சிறுமியின் மரணத்துக்கான சரியான காரணம் கொடுக்க முடியாமலிருப்பதாக டாக்டர்கள் தெரிவித்ததைத் தொடர்ந்து பிரேதபரிசோதனைக்கு உத்தரவிட்டார் அத்துடன் நிலாவெளி அகதிகள் முகாமில் உள்ள இறந்த சிறுமியின் உறவினருக்கு அறிவிக்கும்படியும் தெரிவித்துள்ளார்-

1985 ஆனி 28ம் திகதிநிலாவெளி அகதிமுகாமிலிருந்துஇச் சிறுமி புறப்பட்டு யாழ், குருசோவீதியிலுள்ள திருமதி ம. பரமானந்தம் என்பவருடன் வசித்து வந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

## மேல்மாடி கட்டிட திறப்பு விழா

(உடுப்பிட்டி)

உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் நிர்மணிக்கப்பட்ட மேல்மாடிக் கட்டிடத் திறப்பு விழா நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை காலை யாழ். கல்விப் பணிப்பாளராகவிருந்த வலயப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்ற திரு. எம். சிமியாம்பிள்ளையால் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்படவுள்ளது.

கல்லூரி அதிபர் திருமதி பி. இராஜேந்திரசிங்கத்தின் தலைமையில் நடைபெறவுள்ள இவ் விழாவிலே உடுப்பிட்டி வட்டாரக் கல்வி அதிகாரி திரு. வி கே ஈசுரபாதம் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்கிருர் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆப்கான் படைகளுக்கு இந்தியாவில் பயிற்சி!

## பாகிஸ்தானின் குற்றச்சாட்டு!

(கராச்சி)

இந்தியா, ஆப்கானிஸ்தானின் ஆயுதப்படைகளுக்கு ஆயுதப் பயிற்சியளித்துவருவதாக பாகிஸ்தான் குற்றஞ்சாட்டியுள்ளது.

பாகிஸ்தானின் பாராளுமன்றத்தில் உரையாற்றிய வெளியுறவுக்கான இணைய மைச்சர், ஆப்கானிஸ்தானின் அரசாங்கத்துக்கு இந்தியாவினால் வழங்கப்படும் எத்தகைய ஆயுத ரீதியான ஆதரவும், ஆப்கானிஸ்தான் பற்றிய ஐ. நா. சபையின் பிரேரணைகளுக்குமுரண்பாடாக அமையுமெனக் குறிப்பிட்டார்.

இதனிடையே, இவ்வருடம் ஜனவரி மாதம் ஆப்கானிஸ்தானின் உயர்மட்ட ராணுவக் குழுவொன்று உத்தரப் பிரதேசத்துக்கு விஜயம்செய்து அங்கு தமதுபடைகளுக்கு, இந்திய ராணுவத்தினால் அளிக்கப்படும் பயிற்சிகளைப்பார்வையிட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானில் பார்பரக் கார்மயின் கம்யூனிஸக் கட்சியைக் காப்பாற்றுவதற்காக சோவியத் படைகள் 79ம்ஆண்டில் அங்கு ஊடுருவியதும், கார்மயின் அரசை எதிர்த்து இஸ்லாமிய புரட்சிப் படைகள் அமெரிக்க ஆதரவுடன் போரிட்டுவருவதும் தெரிந்ததே! இவ்விஷயத்தில் சோவியத்தைக் கண்டித்து நிறைவேற்றப்படும் பிரேரணைகளுக்குப் பெரும்பாலும் இந்தியா ஆதரவளிப்பதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் பாகிஸ்தானின் இந்தக்குற்றச்சாட்டு உண்மையானால் ஆசியாவின் ராணுவக் கட்டுக்கோப்பில் பல விபரீத மாற்றங்கள் ஏற்படலாம் என ராஜதந்திரிகள் அச்சம் தெரிவித்துள்ளனர். (செ)

## ரஞ்சித் மரணவிசாரணை ஒத்திவைப்பு

[யாழ்ப்பாணம்]

துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் இறந்த நிலையில் யாழ் ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்ட திஸாகாமி ரஞ்சித் என்பவரின் மரண விசாரணை நடைபெற்றபோது அவரின் உறவினர்களோ, சாட்சிகளோ சமுகமளிக்காததால், மரணவிசாரணை அதிகாரி க. கேசவன்பிரேதபரிசோதனைக்கு உத்தரவிட்டு மரணவிசாரணையை ஒத்திவைத்தார்.

இவ்விசாரணையின் போது சமுகமளித்திருந்த பொலிஸ் சார்ஜன்ட் தெரிவிக்கையில், இச்சடலத்தை ஒப்படைத்தவர் கொடுக்கப்பட்டிருந்த விலாசத்துக்கு தாம் சென்று விசாரித்தபோது அப்படிவிலாசம் இல்லாதது தெரிய வந்துள்ளதாக சொன்னார். பிரேதபரிசோதனையை பேராசிரியர் என். சரவணபவானந்தன் நடத்தினார். [மா]

# "நானே தொடர்ந்தும் ஜனாதிபதி!"

## மார்க்கோஸ் கூறுகிறார்

### மார்க்கோஸுக்கான ஆதரவை அமெரிக்கா வாபஸ் பெற்றது!

(மணிலா)

**திருமதி அக்கினோவை ஜனாதிபதியாகப் பிரகடனப் படுத்தியிருக்கும் செயல் சட்டவிரோதமானது என்று ஜனாதிபதி மார்க்கோஸ் எச்சரித்துள்ளார்.**

**அமெரிக்காவும் மார்க்கோஸுக்கான தனது ஆதரவை வாபஸ் பெற்றுள்ளது.**

மார்க்கோஸ் பதவி விலக வேண்டும் எனபெரும்பாலான பிலிப்பைன்ஸ் மக்கள் வற்புறுத்தப்பட அதேவேளையில் மக்களின் ஆதரவு தமக்கு உண்டு எனக்கூறும் மார்க்கோஸ், திட்டமிட்டபடி தான் ஜனாதிபதியாகப் பதவியேற்கப் போவதாகத் தெரிவித்துள்ளார்.

பிலிப்பைன்ஸின் பல்வேறு பகுதிகளிலும் மார்க்கோஸ் ஆதரவுப்படைகளுக்கும், திருமதி அக்கினோ ஆதரவுப்படைகளுக்கும் தொடர்ந்தும் கிளர்ச்சிகள் நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெரும்பாலான ராணுவத்தினர் அக்கினோவ்பக்கம் சாய்ந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி மார்க்கோஸும் குடும்பத்தினரும் அரசமாளிகையிலேயே அடைந்துகிடக்கின்றனர்.

அமெரிக்க அதிபர் றீகன், பிலிப்பைன்ஸின் மார்க்கோஸுக்கு ஆதரவான ராணுவப் பிரிவுகள் அப்பாவிமக்களுக்கெதிராகப் பயன்படுத்தப்படுமானால் பிலிப்பைன்ஸுக்கான ராணுவ உதவிகள் முற்றாக நிறுத்தப்படும் என எச்சரித்துள்ளார்.

ஜனாதிபதி மார்கோஸும் குடும்பத்தினரும் விரும்பினால் அமெரிக்காவில் வந்து தஞ்சமடைவதற்கேற்றவாறு இரு அமெரிக்க விமானங்கள் கிளார்க் விமானப்படை விமான நிலையத்தில் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன [செ]

உலகச் செய்திகள்

## வெளிவாரிப் பரீட்சைகளை யாழ்நகரில் நடத்தக் கோரிக்கை!

(யாழ்ப்பாணம்)

வெளிவாரிப்பட்டதாரிதமிழ் மாணவர் ஒன்றியம், தமது பட்டதாரிப் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடாத்த வேண்டுமென கோரியுள்ளனர். இதுசம்பந்தமான மகஜரை கல்வியமைச்சுக்கும் நேரடியாகச் சென்று சமர்ப்பிப்பதெனவும், முடிவுசெய்துள்ளது. அண்மையில் இந்தஒன்றியத்தின் கூட்டம் யாழ்ப்பாணம் கல்வி நிலையத்தில் எம். பி அருளானந்தம் தலைமையில் நடைபெற்றபோது மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டது. இது சம்பந்தமாகச் செல்லும் ஏழு பேர் கொண்ட குழு உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். (ஐ)

## மகளிர் கல்லூரி அ.பி. சங்க கூட்டம்

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 4ம் திகதி பிற்பகல் கல்லூரி அதிபரும் சங்கத் தலைவருமான திருமதி கலாவல்லி ஆறுமுகதாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

## றீகனுக்கு எதிராகவும் ஒரு வழக்கு!

(கெய்ரோ)

அமெரிக்க ஜனாதிபதி திரு. ரொனல்ட் றீகனுக்கெதிராக எகிப்திய நீதிமன்றமொன்றில் வழக்குத் தாக்கல்செய்யப்பட்டுள்ளது.

கடந்த வருடம் அக்டோபர் மாதம் இத்தாலிய உல்லாசக் கப்பலான 'அக்கிலோலாரோவை'க் கடத்திய பாலஸ்தீனியர்களைக் கொண்டுசென்ற எகிப்திய விமான சேவையில் விமானமொன்றை அமெரிக்க கடற்படை விமானங்கள் இடைமறித்து தரையிறக்கிய சம்பவம் தெரிந்ததே!

இச்செயல் எகிப்திய மக்களின் கௌரவத்தைப் பாதிக்கும் ஒரு செயலாகுமெனக் குற்றஞ்சாட்டி முஸ்தபா அக்ஷுப் எனும் வழக்கறிஞர் எகிப்திய நீதிமன்றமொன்றில் வழக்குத் தாக்கல்செய்துள்ளார் நூறுகோடி டாலர்களை நஷ்டஈடாகக் கோரும் இந்த வழக்கு இவ்வருடம் மேமாதம் விசாரணைக்கெடுக்கப்படும்.

றீகன் இல்லாத நிலையில் (Inabsentia) விசாரிக்கப்படப் போகும் இந்த வழக்கு, உலகின்சர்வவல்லமையும் பொருந்திய ஒரு மனிதருக்கெதிராக தொடுக்கப்பட்டிருப்பதனால் இது உலக கவனத்தை ஈர்க்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (செ)

## 'நாஸி' குற்றவாளி

### இஸ்ரேலுக்கு அனுப்பப்படுவார்!

(டெல்அவிவ்)

அமெரிக்காவில் தனது நாடுகடத்தல் உத்தரவை எதிர்த்து முறையீடு செய்த நாஸிக் குற்றவாளியின் முறையீடு நிராகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவரை 'வரவேற்க' இஸ்ரேல் தயாராகிவிட்டதாக அறிவிக்கப்படுகிறது.

ஜோன் டெம்யன்யுக் என்ற 65வயது நிரம்பிய இந்தநாஸிக் குற்றவாளி இரண்டாம் உலக மகாயுத்தத்தின்போது 'டிரெப்ளிங்கா' வதைக்கூடத்தில் ஆயிரக்கணக்கான யூதர்கள் கொல்லப்படக்காரணமானவரென்று ஜேர்மன், இஸ்ரேல் பொலிஸாரினால் தேடப்பட்டு வந்தவரென்றும், இவர்கடந்த மாதம் அமெரிக்காவில் கைது செய்யப்பட்டு நாடுகடத்தல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டதென்றும், அவ்வுத்தரவை எதிர்த்து அவர் மேன்முறையீடு செய்திருந்தார் என்றும் 'ஈழநாடு' முன்னரேயே தெரிவித்திருந்தது.

இவரின் மேன்முறையீடு அமெரிக்க நீதிமன்றமொன்றினால் நிராகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து இவர் இஸ்ரேலுக்கு விரைவில் நாடுகடத்தப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவரை இஸ்ரேல் நீதிமன்றமொன்றில் விசாரிக்க தேவையான சட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது என இஸ்ரேல் அறிவித்துள்ளது. (செ)

## இந்தியாவில் சிறுவர்களுக்கு வீர விருதுகள்!

புதன் மஞ்சரி

அநேகமாக ஒவ்வொரு நாட்டிலும் வீரச்செயல்களுக்காக வருடந்தோறும் விருதுகள் வழங்கப்படுவதுண்டு: இவ்விருதுகள் பொதுவாக ராணுவத்திலுள்ளவர்களுக்கு வழங்கப்படுவதுண்டு,

ஆனால் இந்தியாவில் வீரச்சிறுவர்களுக்கு 'சஞ்செய் சோப்பிரா' விருதும் வீரச்சிறுமிகளுக்கு கீதா கோப்ரா விருதும் வழங்கப்படுகின்றன,

டில்லியில் பயங்கரக்குற்றவாளியாகத் தேடப்பட்டு வந்த பில்லா, ரங்கா எனும் கேடிகளுடன் போராடி உயிர்விட்டவர்களே இந்த சஞ்செய் கோப்ராவும், கீதா கோப்ராவும். இவர்களின் நினைவாகவே இந்த விருதுகள் வழங்கப்படுகின்றன.

★ ★ ★

### 8-வது 'உலக அதிசயம்'

தென்னாபிரிக்காவில் முதன் முறையாக இளம் வெள்ளையர் ஒருவர் மீது தேசத்துரோக குற்றம் சாட்டப்பட்டுள்ளது!

எரிக் கல்ச்சர் என்ற இந்த வாலிபர், தடைசெய்யப்பட்ட ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸின் வெளிநாட்டு முகாமொன்றில் ஆயுதப்பயிற்சி பெற்றுள்ளவரென்றும், இவர் தங்கியிருந்த வீட்டில் பொலிஸார் ஆயுதங்களைக்கைப்பற்றினரென்றும் அறிவிக்கப்பட்டுளளது.

இது ஒரு எட்டாவது அதிசயம் இல்லையா) (செ)

★ ★ ★

### குட்டை மனிதரின் பிள்ளைகள்...

குட்டையான மனிதர்கள் தமது குழந்தைகளும் குட்டையாகவே பிறந்து விடுமே என்று அஞ்சுவதுண்டு அவர்களுக்கெல்லாம் ஒரு இனிய செய்தியை விஞ்ஞானிகள் வெளியிட்டுள்ளனர்.

இவர்கள் கலப்புமணம் செய்து கொண்டால் இவர்களின் பிள்ளைகள் பெற்றோரை விட உயர்வாக வளர்வராம். (நெட்டை தம்பதிகளுக்கும் இந்த விதிதான்.)

குட்டை மனிதர்களே கவனிப்பீர்களா!

## அவசரகாலச் சட்டத்தின் கீழ் விசாரணை

[யாழ்ப்பாணம்]

யாழ் பொலிஸ் நிலையத்துக்கு முன் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான இளைஞனின் மரணவிசாரணை அவசரகால சட்ட விதியின் கீழ் நடைபெறும்.

யாழ் நீதவான் பிரேதபரிசோதனைக்கு உத்தரவிட்டு, அறிக்கையை கொழும்பு மேல் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்குமாறு பணித்திருந்தார்.

இறந்தவர் மன்னாரைச் சேர்ந்த செபஸ்தியாம்பிள்ளை என்றும், இவர் குருநகரில், அவரது உறவினரின் வீட்டில் தங்கியிருந்தாரென்றும், பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

''கோடானுகோடி கொடுப்பினுந் தன்னுடை நாக் கோடாமை கோடிபெறும்''.

—ஔவையார்

## நமது நோக்கு

# அண்டப்புளுகு ஆபத்துக்கு உதவாது

ஆயுதபலமூலம் இனப் பிரச்னையை தீர்க்கமுடியாதென்பதை இராணுவத் தலைவர்கள் பலமுறை அரசுக்கு தெளிவுபடுத்தியிருக்கின்றனர்.

வடக்கிலும் கிழக்கிலும் தொடர்ந்து நடைபெறும் இனக்கொலைகளை - அப்பாவித்தமிழ்மக்களைக்கொன்று குவித்தலை-உயிரோடு எரித்தலை வேறு எவ்வாறு விளக்கலாம்?

சென்றவருட புதிய பாராளுமன்ற அமர்வில் ஜனாதிபதி உரை நிகழ்த்திய போது தேசம் ஒன்றுபட்டு பயங்கரவாதத்தை ஒழிப்பதில் வெற்றி காணவேண்டுமென்று வற்புறுத்தியிருந்தார்

இவ்வருட சுதந்திரதினக் கொண்டாட்டத்திலும் அதே பாவம், ராகம், தாளம்; இன்னும் ஒருபடி ஏற்றமெனலாம். ''பயங்கரவாதத்தின் பல்வேறு ரூபங்களை இவ்வருடத்துக்குள் குழிதோண்டிப் புதைப்போம்'' என்ற வீறு பேச்சில் காணப்பட்டது.

20ம் தேதி நடைபெற்ற பாராளுமன்ற அமர்வில் ஜனாதிபதி நிகழ்த்திய உரையில் இதன் வேகம் குறைந்திருப்பதை அவதானிக்கக் கூடியதாகவிருந்தது.

அண்டப்புளுகு ஆகாசப் புளுகாக வீறுகொள்வது இயல்பு; ஆனால் அதற்கு மாருக அது சோர்வடைவதற்கு காரணமில்லாமல் இல்லை.

இவ்வருடத்துக்குள் பயங்கரவாதம் ஒழியும் என்று எத்தனை வருடங்களுக்கு பாராயணம் செய்வது? எனவே வருடத்தில் இருமுறை அதுவும் ஒரேமாதத்தில் என்ருல் பேச்சாளருக்கே அலுப்புத்தட்டும்.

முக்கிய காரணம் வேறொன்று. இலங்கைவர வெளிக்கிட்ட இந்திய விசேட தூதுவர் ரொமேஷ் பண்டாரி சுதந்திரகொண்டாட்ட காலத்தில் சென்னையிலிருந்து டில்லி திரும்பியது ஒருபெரும் விழுக்காடு; தமிழர் விடுதலைக் கூட்டணி ஆலோசனைகள் ஒன்றுக்கும் உதவா என்று தெரிவித்த இலங்கை அரசின் மிடுக்கு இந்தியாவுக்கு கசப்பானது.

சாந்தசொரூபி பிரதமர் ராஜீவ் ''என்ன இலங்கை அரசுக்கு இந்தியாவின் மத்தியஸ்தம் பிடிப்பில்லையோ? வாய்திறந்து சொல்லட்டும்'' என்று மாலைதீவில் திருவாய் மலந்தார். தாயைப் போல் அல்ல பிள்ளை என்று நாம் நினைத்தாலும் இந்தியப் பிரதமர் சுண்டங்காய்ப் பிரதமரல்ல என்பதை ஆசிரியர் 'சோ', குட்லிப் நாயர் போன்ற பிரபல எழுத்தாளர்களே இன்று ஒப்புக்கொள்கின்றனர். இதற்கு நாம் எம்மட்டு!

எனவே அண்டப்புளுகு அணுப்புளுகாக அருகுவதைவிட ஆகாசப் புளுகாக உயர இடமிருக்கவில்லை.

பாதுகாப்பு அமைச்சர் மிக அவசரமாக இந்தியத் தொட்டிலை ஆட்டி ''ஆராரோ, ஆராரோ'' என்றும், ''ஒரு குடைக்கீழ் நீயிவ்வுலகாள வந்தவனே'' என்றும் ''எங்கள் பிரச்னைக்கு நீங்களே தீர்வுகாண உதவவேண்டும்'' என்ருர்.

அதேசமயம் வவனியாவிலும், கிளிநொச்சியிலும், யாழ்ப்பாணத்திலும் இன்று இவற்றை அடிக்க அம்பாறையில் உருவாகும் 'அம்றிற்சாரி' லும் மக்கள் உயிரோடு எரிக்கும் அப்பியாசத்தில் இலங்கைப் பிரச்னையையும் கிள்ளிவிட்டிருக்கிருர்.

அவிழ்க்கமுடியாத இந்த சிக்கலை எவ்வாறு இந்தியா அவிழ்த்துவைக்கும் என்ற ஆசை அரசுக்கு உண்டு.

'தேர்தலை நடத்து' என்று சீறிவரும் சிறிமாவின் தலைமை என்ன செய்யுமோ என்ற ஏக்கம் துகிலுரிந்த அரசுக்கு தன்னையறியாமலே இருக்கும்,

இந்தியாவுக்கும் ஸ்ரீமாவுக்கும் இடை நடுவே இருதலைக்கொள்ளி எறும்பு போல திண்டாடுகிறது இலங்கை அரசு.

இதனை விளங்கியோ விளங்காமலோ நாட்டில் வாழும் தமிழ்மக்கள் என்ன செய்கிருர்கள்? ''அம்றிற்சார் படுகொலைக்கு'' இன்று தேவைப்படுவது கண்துடைப்பு கமிஷனு?

எதிரியும் நீதவானும், ஒருவரே என்ற தனித்துவ வழக்கும் தமிழர் பிரச்னையும் உலகங்காணுத இரு அற்புதங்கள். வெகுஜன இயக்கம் இந்தநெருக்கடியில் நாள்கோள் பார்ப்பதேன்?

தெளிவும் துணிவும் இன்றில்லாவிட்டால் வேறென்று கிடைக்கும்?

தமிழ்ப் போராளிகள் பொறுப்பு வேறு. தமிழ் மக்களின் பாதுகாப்புப் பேணப்படுவதற்கு பொது மக்கள் எடுக்கும் நடவடிக்கை என்ன? இதனை தென்இலங்கை சிங்கள மக்களுக்கு நன்ருகப் புரிய வைக்கவேண்டும்.

நாளுக்கு நாள் இரு சமூகங்களும் சேர்ந்து வாழும் சாத்தியம் குறைந்து வருகிறது. எனவே முடிவு எப்படி இருக்குமென்பதை அவர்கள் தாமதமின்றி உணரவேண்டும்.

நாட்டின் அகத்திலிருந்து நாகரிக வாழ்வு அழிந்து போவதை உலக வரலாறு எடுத்துரைக்கிறது, இதற்குப் பல காரணங்கள் காட்டப்பட்டிருக்கின்றன. ஒன்று: அடக்குமுறையில் தொடரும் ஆட்சியில் மக்களின் அபரிமிதமான பொறுமையைக் காட்டினுல் அதன்முடிவு அழிவு என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும்.

# அஸ்வமேதயாகம் அதன் தாற்பரியம்

[கொழும்பில் நடைபெற்ற அஸ்வமேத யாகத்தில் கலந்து கொள்ள வந்திருந்த மாலைமாமுனிவர் குருஜி சுந்தரராம் சுவாமிஜியை எமது கொழும்பு நிருபர் சந்தித்தபோது சுவாமிகள்கூறியகருத்து.]

கொழும்பில் அமைச்சர் செல்லையா இராசதுரை அவர்களின் முழுமுயற்சியால் யாராலும் சாதிக்க முடியாத ஒரு அரிய பெரிய மகாசக்தி ஞான சமரச தெளிவுக்கான அசுவமேத யக்யம் 48 நாட்களாக பம்பலப்பிட்டி கதிரேசன் கோயிலில் தமிழகத்திலிருந்துவந்த சிவாச்சாரியார்களினுல் நடத்தப்பட்ட வேளையில் அடியேன் மாலைமாமுனிவர் குருஜி சுந்தரராம் சுவாமிஜி அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க பெப்ரவரி மாதம் 11ம் திகதி காலைமுதல் யக்யம் நிறைவுபெறும் தினம் வரை கலந்து கொள்ளும் பாக்கியம் கிடைத்தது. இது தெய்வத்தின் கடாட்சம் என்றே கொள்ளவேண்டும்.

தெய்வத்தின் கடாட்சமும் குரு கடாட்சமுமே இதனுடைய உள் தாற்பரியமாகும்.

எம்மதமும் சம்மதம் எல்லோருக்கும் சத்யம் சமரசம் தெய்வத்தின் திருவருளால் நல்ல விதமாக எல்லாம்வல்ல சூரிய பகவான் எப்படி எல்லா உலகிற்கும் ஒரே ஒளி வீசக்கூடிய தன்மையில் இருந்து கொண்டிருக்கிருரோ அத்தன்மையில் அந்த நாராயணனை ஒரு வெண்குதிரை வடிவமாகப் பாவித்து பூஜித்து தகுந்த முறைப்படி பண்டைய காலத்து ஆகம விதிப்படி மந்திர உச்சாடனம் செய்யப்பட்டு தெய்வத்தைப் பிரார்த்திக்கும் பாக்கியம் இந்த சந்ததிரத்திலே எமக்குக் கிடைத்தது எமது மூதாதையர் செய்த பூஜா பலனேஆகும்.

மேற்குறிப்பிட்டபடி உலகெங்கும் தெய்வீக ஒற்றுமை ஏற்பட்டு தெய்வீக நல்ல குணங்களுடன் எல்லோரும் வாழ நாமும் வாழ வேண்டும் என்ற உள்உணர்வுடன் எல்லோரும் வாழவேண்டும் என அடியேன் குருநாதர் வள்ளிமலை மௌன குருவின் கடாட்சத்தைப் போற்றி வணங்குகிறேன்.

10 ஆண்டுகளுக்கு முன் 'ஈழநாடு' பத்திரிகை அலுவலகத்திற்கு ஸ்ரீமான் தங்கராஜா அவர்கள் மூலமாக யாழ்ப்பாணம் வந்திருந்தபோது அங்கும் அக்காலத்தில் என் குருநாதர் பற்றி விபரமாகக் கூறும் பாக்கியம் பெற்றிருந்தேன். இப்பாக்கியம் தந்த அப்பெரியாருக்கு யான் என்றுமே கடமைப்பட்டிருக்கிறேன்.

# 27-ம் திகதி ஊர்வலம்: பண்டத்தரிப்பு பூரண ஆதரவு

[பண்டத்தரிப்பு]

தமிழ்மக்கள் மீது ஆயுதப் படையினர் நடாத்திவரும தாக்குதல்களைக் கண்டித்தும், இதர சில கோரிக்கைகளை முன் வைத்தும், எதிர்வரும் 27ம் திகதி யாழ். நகரில் நடத்தப்படவிருக்கும் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் பங்கு பற்றி தங்கள் முழுஆதரவை தெரிவிப்பது என்று பண்டத்தரிப்பு வர்த்தகர் சங்கம் தீர்மானித்துள்ளது.

அன்றையதினம் பண்டத்தரிப்பு பகுதியிலுள்ள சகல வர்த்தக நிறுவனங்களையும் கடைகளையும் பூட்டி யாழ். நகரில் நடைபெறும் ஆர்ப்பாட்ட ஊர்வலத்திலும், பேரணியிலும் தவருது கலந்துகொள்ளுமாறு பண்டத்தரிப்பு வர்த்தகர் சங்கத் தலைவர் திரு. மு. நடராசா விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

## இன்று திருவள்ளுவர் குருபூசை:

# திருவள்ளுவர் பற்றிய ராஜாஜி சிந்தனைகள்

### தெய்வமும் கர்மமும்

தெய்வமும் கர்மமும் திருக்குறளில் இல்லை என்று சிலர் வாதிக்கிருர்கள். அது தவறு. ஹிந்து தருமத்தில் ஒப்புக்கொள்ளப்பட்ட கர்ம நியதியைத் திருவள்ளுவர் கொஞ்சமேனும்மாற்றவில்லை. ஊழ் என்பது கர்ம நியதி. நல்வினை தீவினை இரண்டும் அவ்வினை செய்தவனை சென்று அடையும். முன்பு செய்த வினை பின்பு விளைவதரும். ஒரு ஜீவனுடைய எண்ணங்கள், ஆசைகள், செயல்கள் அனைத்தும் சேர்ந்து அவனுடையமறுபிறப்பின் 'முதல்' ஆகும்.

ஊழ் என்ருல் காரணமற்ற சுகமோ துக்கமோ அல்ல. நாம் எழுதின எழுத்தே நம் தலையெழுத்து. முற்பிறப்பில் செய்த வினையின் விளைவுக்கு ஊழ் என்று பெயர். தராசில் தூககியளந்தவாறு வினையும் விளைவும் சமமாக இருக்கும். மரணத்துடன் கணக்குத் தீராது. அடுத்த பிறப்புக்கு கணக்கு ஏறும். கஷ்டமும் துக்கமும் வந்தால் நான் எந்தப்பாவமும் செய்யவில்லையே என்று கேட்கலாம். முன் ஜன்மத்தில் செய்த தீவினையின் பயன் என்பது அந்தக் கேள்விக்குவிடை. உடல், வாக்கு, மனம்—இவற்றைக் கொண்டு செய்யப்படும் அனைத்தும் வினையாகும்.

முயற்சியால் செல்வம்அடைகிருேம். சோம்பரால் வறுமை வந்து தாக்குகிறது. இவை இரண்டும் — முயற்சியும் மடியும் ஊழின் விளைவே ஆகும். முன்ஜென்மத்தை நீ எப்படிக் கழித்தாயோ, அதன் விளைவு இந்த ஜென்மத்தில் நீசெய்யும் முயற்சி அல்லது உன் சோம்பர். மடியும் முயற்சியும் தாமாக வரவில்லை. நீ பெற்ற சொத்து. முற்பிறப்பில் நீ செய்த வினைகளின் பயன். பணிக்குத் தகுந்த பயன்பெறுவாய். அது உண்மை. ஆனல் அந்தப் பணிக்கு வேண்டிய முயற்சியும் அதைத் தடுக்கும் மடியும் ஊழின் பயன்

### கல்வி

கல்வியின் சிறப்பு என்னவென்ருல், குருவும் சீடனும் இருவரும் இன்பம் அடைகிருர்கள். சொல்லித்தருவது குருவுக்கு மகிழ்ச்சி தருகிறது. அறிவு அடையும் சீடனும் மகிழ்ச்சியடைகிருன். சொல்லித் தருவதே ஓர் இன்பம். அப்படியிருக்க மாணவன் தனக்கு நன்மை செய்தான் என்று குருவை நன்றியுடன் பாராட்டுகிருன். தன் செயல் தனக்கே தரும் மகிழ்ச்சி ஒரு புறம் இருக்க, தான் ஏதோ தந்து விட்டுச் சீடனை மகிழச் செய்ததாக மேற்கொண்டு ஒரு லாபமும் பெறுகிருன். நல்ல ஆசான் இருவிதத்தில் லாபம் அடைகிருன். தன் பணியே தனக்குத்தரும் இன்பம் ஒன்று, இவன் உலகத்துக்கு நன்மை செய்கிருன் என்று எல்லோரும்போற்றுவதும் மேற்கொண்டுபெறும் இன்பம். இதனுலேதான் கற்றறிந்தவர் கல்வியின்மேல் அளவற்ற மதிப்பு வைக்கிருர்கள்

தாம்இன் புறுவது உலகுஇன் புறக்கண்டு<br>காமுறுவர் கற்றறிந் தார்.

### அறிவு

அறிவை இரு வகையாக அடையலாம் ஒன்று நூலைப் படித்து அடையும் முறை. மற்ருென்று பெரியோர் சொல்லக் கேட்டு அடையும் முறை ஒன்று கல்வி, மற்ருென்று கேள்வி. இவ்விரண்டிலும் கேள்வியே மேலானது என்று கூடச் சிலர் சொல்லுவார்கள். தானே படித்தறிந்ததைவிடப் பண்பட்ட ஆசாரியன் சொல்லக்கேட்டது நன்ருக மனத்தில் பதியும் என்ற காரணத்தால் கல்வியைவிடக் கேள்வி மேலானது என்பார்கள். தானேபடித்தறிந்த அறிவில் குற்றங்கள் புகுந்திருக்கலாம். கேள்வியில் அது கிடையாது. அது இருமுறை வடிகட்டிய அறிவு. ஆனபடியால் அதில் குற்றம் மிகக்குறைவு என்பது நிச்சயம்.

செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம்<br>அச்செல்வம் செல்வத்துள் எல்லாம் தலை

# 'இந்து போர்ட்டும்' தருமரும்

(யாழ்ப்பாணம்)

வைத்தியகலாநிதி 'பி. எஸ்.ஸின்' சேவையைத் தொடர்ந்து அவர் வழியில் இந்து போர்ட் நிர்வாக செயல்பாடுகளில் கலந்து கொண்டு சைவ வித்தியாவிருத்திச் சங்க - திருநெல்வேலி சைவ சிறுவர் இல்ல வளர்ச்சிகளில் கூடியகவனமும் ஒத்துழைப்பும் வழங்கினுர் வி. தர்மலிங்கம் என்று இந்துபோர்ட் அமைப்பின் நிர்வாகக் கூட்டத்தில் பலரும் உரையாற்றியதோடு இரண்டு நிமிட அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

சிறுவர் இல்லத் தலைவர் சட்டத்தரணி திரு. எஸ். ஆர் கனகநாயகம் தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் சட்டத்தரணி ளான செ மகேசன், எஸ் செல்வராஜா. எம். எஸ். சுந்தரலிங்கம், க. குணரத்தினம், செல்வி எஸ். அபிமன்னசிங்கம், டாக்டர் ரீ பகீரதன், லயன் ஆர். அனுதரட்சகன், இ. விஜயரத்தினம் ஆகியோர் கலந்து கொண்டனர். (ப)

# பாலபண்டிதர் வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தினர் பண்டிதர், பாலபண்டிதர் வகுப்புகளை இவ்வருடமும் வழமை போல நல்லைதிருஞான சம்பந்தர் ஆதீனத்தில் நடத்தவுள்ளனர்

மார்ச்மாதம் முதலாம்திகதி இவ்வகுப்புகள் ஆரம்பிக்கப்வுள்ளதால் இவ்வகுப்புகளில் சேரவிரும்புகின்றவர்கள் நல்லை ஆதீன மேலாளர் திரு சி. த. நடராசனுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழரை---

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

னணியின் செயலாளர் திரு. ஈழவேந்தன் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்திக்கு அனுப்பிவைத்துள்ள கடிதம் ஒன்றில், "தமிழர் வாழும் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களைத் திரு ஜெயவர்த்தன இணைக்க மறுப்பதனால் அங்கு வாழும் மக்களின் உயிருக்குப் பெரும் ஆபத்து ஏற்பட்டுள்ளது" என்று குறிப்பிட்டுள்ளார். [செ]

## ஜனதிபதி---

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ஸிற்றிடம் ஜனதிபதி ஜெயவர்த்தன கூறினர்.

சுமார் 45 நிமிடங்கள்வரை நடைபெற்ற இப்பேச்சுக்களின் போது; அண்மையில் யாழ்ப்பாணம், அக்கரைப்பற்று ஆகிய இடங்களில் நிகழ்ந்த சம்பவங்கள் குறித்து ஜனதிபதியிடம் கேட்டறிந்த திரு. டிக்ஸிற், தமது ஆழ்ந்த கவலையையும் வெளியிட்டார். (ய-பி)

### கடைசிநேர வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

(புறெயிலர்) இறைச்சிக்கு தேவையான கோழிகள்மொத்தமாகவும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்க: Red Rose Farm தெணியார் பைதெரு, வல்வெட்டித்துறை. (C962)

### தேவை

சிறந்த பெரியரக இராசவள்ளிக்கிழங்கு, கறணைக்கிழங்கு பெருந்தொகையாகக் கொள்வனவு செய்யப்படும், உடன் தொடர்பு கொள்ளவும்; C கணேசன், 286. நாவலர் வீதி கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம். [C961

### தவறிவிட்டது

20-2-86 இல் காங்கேசன்துறைவீதியால் மினிபஸ்மூலம் பிரயாணம் செய்யும் பொழுது எனதுதிறப்புக்கோர்வை ஒன்று தவறவிட்டது. கணடெடுத்தவர்கள் கீழ்க் குறிப்பிட்டுள்ள முகவரியில் ஒப்படைக்கவும். வா முத்துக்குமாரசாமி, மானிப்பாய் றேட், உடுவில். (C960)

**எம்பயர் திரையில்**
10-30, 2-30, 6-30,
மோகன் - ஜெயஸ்ரீ
**தென்றலே என்னைத்தொடு**

**லிடோ சினிமா**
10-30, 2-30, 6-30
கல்யாணகுமார்-தேவிகா நடித்த
**நெஞ்சில் ஓர் ஆலயம்**
புதிய பிரதி

**வெலிங்டன்**
10-30, 2-30, 6-30
சிவகுமார்-ராதா-சுரேஸ் நடித்த
**ஆனந்த ராகம்**
(புதிய பிரதி கலர்)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

### பாவித்த கட்டிடப் பொருட்கள் விற்பனை

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் பாவிக்கப்பட்ட ஒரு தொகுதி கட்டிடப் பொருட்களின் விற்பனைக்காக பொறியிடப்பட்ட கூறுவிலைகள் 03-03-1986-ம் திகதிவரை ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.

மேற்படி பொருட்களை அலுவலக நாட்களில் காலை 9-00 மணிமுதல் 4 மணிவரை பார்வையிடலாம். கூறுவிலைகளுக்கு விண்ணப்பிப்போர் மீளப்பெறக்கூடிய வைப்புப் பணமாக 100/- தொகையை காசுக்கட்டளையாகவோ, தபாற்கட்டளையாகவோ செலுத்துவதன் மூலம் நிதியாளரிடம் விண்ணப்பப்படிவங்களை 28-02-1986 ம் திகதி வரை பெற்றுக்கொள்ளமுடியும். கூறுவிலையினடிப்படையில் பொருட்களைப் பெற்றுக்கொள்வோர் முழுத்தொகையையும் செலுத்தி பொருட்களை உடனடியாக அப்புறப்படுத்தவேண்டும். விண்ணப்பக்கடித உறையின் இடதுபுற மேல் மூலையில் UJ/F/B/TS/01/86 என்ற இலக்கம் குறிக்கப்பட்டு நிதியாளர். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் என்ற முகவரிக்கு அனுப்பப்படவேண்டும்

- பதிவாளர்.

[A295]

### 31-ம் நாள் நினைவஞ்சலி

### திருவாட்டி சொர்ணம்மா நவரெத்தினம்



மலர்வு: 14-12-1917
உதிர்வு: 28-01-1986

புன்சிரிப்பு சிந்தி புகழோடு வாழ்ந்து எங்கள் குடும்ப ஒளி விளக்காயும் வழிகாட்டியாகவும் திகழ்ந்து எங்களை மீளாத்துயரில் ஆழ்த்திவிட்டு திடீரென அணைந்த எங்கள் குலதீபத்தின் ஈமக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களிற்கும் அனுதாபந் தெரிவித்தவர்கட்கும் எம்மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன், 27-2-86-ந் திகதி வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

'கோவர்த்தனகிரி' வேலணை மேற்கு, வேலணை-8. C 959

## புனித என்றியரசர் கல்லூரி இளவாலை கன்னியர் மடம்

ஒருங்கே நடாத்தும்

# இல்ல மெய்வல்லுனர் போட்டி

இடம்: புனித என்றியரசர் கல்லூரி மைதானம்

காலம்: 1-03-86 சனிக்கிழமை
பி. ப. 1-30 மணி

பெற்றோர், பழைய மாணவ, மாணவிகள், நலன் விரும்பிகள் யாவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள்.

(C 957)

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்-
வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்."

—திருவள்ளுவர்

உலகத்தில்வாழவேண்டிய அறநெறியில் நின்று வாழ்பவன் வானுலகத்தில் உள்ள தெய்வமுறையில்வைத்து மதிக்கப்படுவான்.



20 மில்க்வைற் நீலசோப் மேலுறைகளில் உள்ள திருக்குறள்களை அனுப்பி அழகிய திருவள்ளுவர் ஸ்ரிக்கர் ஒன்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

**மில்க்வைற்- யாழ்ப்பாணம்.**

A-296

# நீதிமன்ற ஏலவிற்பனை

### யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

1. கந்தையா சுந்தரமூர்த்தியும் பெண்
2. தனநாயகியும், காரைநகர் மேற்கு
— வழக்காளிகள்

1. பொன்னம்பலம் ஆனந்தநடராசாவும் பெண் புனிதவதியும், நீலிப்பந்தினி, காரைநகர்
— பதிலிடப்பட்ட வழக்காளிகள்

எதிராக

1. கணபதிப்பிள்ளை கந்தையா — இறந்துவிட்டார்
2. கந்தையா கைம்பெண் மீனசரத்தினம், காரைநகர் வடக்கு. தனக்காகவும் இறந்த 1-ம் எதிராளியின் சொத்துப் பிரதிநிதியாகவும்
— எதிராளிகள்

யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் ஈடு - 13499 இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த விற்பனவுக்கான அதிகாரத்தின்படி பின்னால் விபரிக்கப்படும் காணியை 1986-ம் ஆண்டு பங்குனி மாதம் 0ந் திகதி வியாழக்கிழமை காலை 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை:

முதல் வட்டி ரூபா 23792/-ம் மார்கழி மாதம் 1972 தொடக்கம் 1-8-1974 வரைக்கும் ரூபா 15000/-க்கு 6% வீத வட்டியும் அதன் பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5% வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 1096/-.

### ஆதன விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி, யாழ்ப்பாணப் பட்டண இறை "வரி மதிப்பீட்டிலக்கம் 8-ம், 10.ம் பிரதான வீதி, யாழ்ப்பாணம்" நில.பர. இலாச்சம் 3 குளி 5 வீடும் கிணறும் பயிர் வகைகளும் எல்லை கிழக்கு துரைசிங்கத்தின் ஆதனம் வடக்கு பிரதான வீதி மேற்கு ஏ. அருளப்பலத்தின் உரிமைக்காரரின் ஆதனம் தெற்கு சி. தம்பிப்பிள்ளையின் உரிமைக்காரரின் ஆதனம்.

நீ. அன்ரனிப்பிள்ளை
விற்பனவுக் கொமிஷனர்

22, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

[C 951]

## தோட்டத்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

லதுக்கு விரைந்த பொலிசாருடனேயே மோதல் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கடத்தப்பட்டவர்களில் ஒருவரை இன்னும் காணவில்லையாம்.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து தலவாக்கொல்லைப் பகுதியைச் சேர்ந்த சுமார் ஐயாயிரம் பேர் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. எம். எஸ். செல்லச்சாமி, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சேபால ஆட்டிக்கல மற்றும் பொலிஸ் மா அதிபருடன் தொடர்பு கொண்டு நிலைமையை விளக்கினர். [ய-பி]

## பிரஜைகள்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விடுதியல் நடைபெறும்.

பத்து லட்சம் கையெழுத்து விவகாரம் உட்பட தமிழ்ப் பகுதியில் ஏற்பட்டிருக்கும் இன்றைய நெருக்கடி பற்றி முக்கியமாக ஆலோசிக்கப்படும்.

பிரஜைகள் குழு பிரதிநிதிகள் அனைவரும் தவறாமல்சமுகமளிக்குமாறு கோரப்பட்டுள்ளனர்.

## நெல் அறுவடை பாதிப்பு

[கிளிநொச்சி]

கிளிநொச்சி மாவட்டத்தில் பரவலாகப் பெய்துவரும் பலத்த மழை காரணமாக நெல் அறுவடை வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

கடந்த இரு நாட்களாக இடைவிடாது பெய்த மழை காரணமாக அறுவடை செய்யப்பட்ட நெல் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

கண்டாவளை, முரசுமோட்டை, வன்னேரிக்குளம், உருத்திரபுரம்தான் கடுமையான பாதிப்புஏற்பட்டுள்ளது.

## மன்னாரில்---

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

சென். செபஸ்தியார் தேவாலயத்தில் தஞ்சமடைந்திருந்தவர்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தபொழுது 12 வயதுள்ள வசந்தி சனகரட்ணம் என்னும் மாணவி பலியானர். அவரின் தாயார்படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். உப்புடபுலத்தைச் சேர்ந்த இந்த மாணவி மன்னார் சொன்வென்டில்படிக்கிறார்

நேற்று முழுநாளும் மன்னார் வீதிகள் வெறிசசோடிக் கிடந்தன. கடைகள் மூடப்பட்டிருந்தன இ. போ. ச., தனியார் டஸ்போக்குவரத்துச் சேவைகள் இடம்பெறவில்லை

நேற்றுக்காலை 11-30 மணி வரை ஒரே குண்டுச் சத்தமும், துப்பாக்கி வெடிச் சத்தங்களும் தொடர்ச்சியாகக் கேட்டவண்ணமிருந்தன

மன்னார் கோட்டை முகாமில் இருந்தும், தள்ளாடி முகாமிலிருந்தும் பீரங்கிவேட்டுகளும் ஷெல்'களும் கிராமங்களை நோக்கி செலுத்தப்பட்டன.

தள்ளாடி முகாமிலிருந்து சுமார் '00 யார் தூரத்தில் உள்ள எரிபொருள் வற்பனவு நிலையத்தடியில் இக்கண்ணிவெடிச்சம்பவம் இடம்பெற்றதாகவும் பின்னர் போராளிகள அவ்விடத்தை நோக்கி துப்பாக்கிப்பிரயோகம் செய்ததாசவும் தெரிவிக்கப்படுகிறது.

படுகாயமடைந்த இராணுவத்தினரில் சிலர் அநுராதபுரம் ஆஸ்பத்திரிக்கும் பின்னர் கொழும்பு ஆஸ்பத்திரிக்கும் ஹெலிகொப்டர் மூலம் எடுத்துச்செல்லப்பட்டனர்.

படுகாயமடைந்து மன்னார் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பலர் வாகனப்போக்குவரத்து வசதியின்மையால் யாழ் பெரியாஸ்பத்திரிக்குக் கொண்டுசெல்ல முடியாதிருப்பதாக ஆஸ்பத்திரி வட்டாரம் தெரிவிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “கலை வாழ்க்கையிலிருந்துதோன்றுகின்றது ஆனால் வாழ்க்கைமட்டுமே கலையாகிவிடாது”

## கவிஞர் முருகையன் கருத்து

(யாழ்ப்பாணம்)

''பல்வேறு கலைவடிவங்களின் ஒரு வடிவமே இலக்கியமாகும் சொற்களைத் தனது கலையாகக் ஊடகமாக கொண்டுள்ளது இலக்கியம். கலைவாழ்க்கையினின்றும் தோன்றுகிறது. ஆனால் வாழ்க்கை மட்டும் கலையாகிவிடாது. வாழ்க்கையின் மீள் அளிப்புத்தான் கலை ''

இவ்வாறு யாழ். இலக்கிய வட்ட ஆதரவில் நடந்த கருத்தரங்கில் இன்றைய இலக்கியம்' என்ற தலைப்பில் உரையாற்றும்போது கவிஞர் முருகையன் குறிப்பிட்டார். நல்லூர் இந்துவிடுதியில் யாழ். இலக்கிய வட்டத்தலைவர் திரு. எஸ். சபாரத்தினம்(சசிபாரதி) தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் திரு, இ. முருகையன் தொடர்ந்து பேசுகையில் ''இலக்கியம் தொடர்பாக முன்னைய காலங்களில் எடுக்கப்பட்ட விதிமுறைகள் தற்போதைய சூழலுக்கு ஏற்பன என்று கொள்ளத் தேவையில்லை.

''சப்பட்டைகள் இலக்கியத்தில் காணப்படுகின்றன. அவை தானாகவே போய்விடக்கூடியவை. எனினும் அச்சப்படைகளை நாம் இனந்தெரிந்து வைத்துக் கொள்ளவேண்டும். கலை முயற்சிகளில் ஈடுபட்டு எமது இனஅடையாளங்களைக்காப்பாற்றமுடியும்'' என்றார் அவர் தொடர்ந்து பேசுகையில்: ''தெளிவில்லாமல் படைப்புக்களை ஆக்குகிறார்கள் பிறர்க்கு விளங்காதவகையில் படைக்கிறார்கள். இவை மக்களைத் திடுக்கிட வைக்கவேண்டும் என்பதற்காகச் செய்யப்படுகின்றன என்றே கருதலாம் எல்லோரும் இலக்கியம் படைக்கமுடியுமா முடியாதா என்பதைவிட எல்லோரும் வாசிக்கும் பழக்கத்தை கைக்கொள்ள வேண்டும் என்பதே முக்கியமானதாகுமென்றார்.

இக்கருத்தரங்கிற்கு தலைமையுரை ஆற்றிய 'சசிபாரதி', உலகில் நிகழ்ந்துள்ள மாபெரும் மாற்றங்களெல்லாம்இலக்கியத்துக்கு மாபெரும் பங்கு இருந்து வந்துள்ளது. மாற்றம் சமூகமானதாகவோ, விடுதலை சம்பந்தமானதாகவோ இருக்கலாம் ஆனால் இலக்கியத்தின் பங்கு அங்கெல்லாம் இருந்திருக்கிறது'' என்றார்

''எனவே எந்தக்காலத்து இலக்கியமும் அந்தக் காலத்து மக்களுக்குப் பொதுவாக நல வாழ்வைக் காட்டியமைந்து சிறப்பாக அந்தக் காலத்தின் தேவையைப் பூர்த்தி செய்து வந்துள்ளது'' என்றார்.

கருத்தரங்கின் இறுதியில் நடந்த இலக்கியக் கருத்துப் பரிமாற்றல்களில் எழுத்தாளர்கள் கலைஞர்கள் கலந்து கொண்டனர்.

கலவயல் வே. குமாரசுவாமி வரவேற்புரை நிகழ்த்தினார். செ. யியன் செல்வன் நன்றி கூறினார். [ஐ]

## தவக்காலச் சிந்தனை



13ம் நாள்

மனித உறவுகளில் 'நான் நல்லவன் நீ நல்லவனல்ல' என்ற அடிப்படையில் அயலவனைக் கண்டனம் செய்வதும். குறைகாண்பதும்' கோட்டுப் படிகளுக்கு ஏறுவதும் சாதாரணமாகிவிட்டது. அற்பபொருளுக்கு ஈடாக அயலவனது உயிரையே பறித்த முரட்டுத் தனம் படைத்த சமூகத்தவர்க்கு மோயீசன் வழங்கிய கட்டளை கண்ணுக்கு கண், பல்லுக்குப்பல், இது ஒருவகை நீதி. ஆனாலும் இறைமகன் யேசுவின் போதனையிலே-ஆண்டவரது நீதி அன்பும், இரக்கமுமே.

பாவி மனமாற்றமடைய வேண்டுமென காலமெல்லாம் காத்திருக்கும் இறைவன் இரக்கதேவனே. அவரது இரக்கப உலக சமூகத்தில் பொழியப்பட்ட நாமும் ஊடகமாக மாறலாம். நாம் உணரும் கருணையின் தெய்வத்தின் இரக்கம் எம் செயலின்

:கனிவான வார்த்தைகள்
தூய்மையான சிந்தனைகள்
பண்பான செயலில் பிரதிபலிக்கட்டும்!

சுவாமி ஜீவா போல்
அ. ம. தி

## சுகாதாரப் பணிப்பாளரின் சுற்றுநிருபம்

[யாழ்ப்பாணம்]

மருந்துகளை வீணாக்குவதை நிறுத்துமாறு. நோயாளிகளுக்கு தேவைக்கதிகளவில் மருந்துகள் கொடுப்பதைத் தவிர்க்குமாறும் சுகாதார சேவைகளுக்கான பிராந்தியப் பணிப்பாளர் (யாழ். பிராந்தியம்) பிராந்தயத்திலுள்ள சகல சுகாதார நிலையங்களின் தலைவர்களுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது சம்பந்தமாக அவர் அனுப்பியுள்ள சுற்றுநிருபமான்றில் பின்வரும் விதிமுறைகளைக் கடைப்பிடிக்குமாறு சுகாதார நிலையங்களின் தலைவர்களைக் கேட்டுள்ளார்.

''எழுவாரத்திலும் நிலையத்தில் சிகிச்சை பெறும் நோயாளிகளின் எண்ணிக்கையைக் கவனத்தில் கொண்டு தேவையான மருந்து மற்றும் பிளாஸ்டர் போன்றவற்றின் அளவைச் சரியாகக் கணித்தல் வேண்டும்.

''ஒவ்வொரு காலாண்டுக்கும் தேவையான மருந்து மற்றும் பிளாஸ்ரர் போன்றவற்றின் அளவை உரிய திகதிக்கு முன்னர் யாழ் அபிவிருத்தி சபைக்கு அனுப்புதல் வேண்டும்.

''ஏதேனும் காரணங்களுக்காக ஒரு நிலையத்திலிருந்த ஒரு நோயாளியை இன்னொரு நிலையத்துக்கு மாற்றம் செய்தல் மாற்றப்படும் நிலையத்தின் தலைவருக்கு விலாசமிட்ட கடிதமொன்று நோயாளிக்கு அனுப்பப்படவேண்டும்.''

உள்ளூரில் நோயாளிகள் சிகிச்சை பெறத்தக்க யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்கு நேரடியாகப் பெருமளவில் செல்வதனால் அங்கு பெரும் நெருக்கடியும் மருத்துவ ஊழியர்களுக்கு சங்கடமும் ஏற்படுகின்றது. அங்கு வைத்திய சிகிச்சை தேவைப்படுகிறவர்களை மாத்திரமே அனுப்பும் வகையில் ஒத்துழைக்குமாறு அந்தச் சுற்றுநிருபத்தில் கேட்கப்பட்டுள்ளது.

## 7-வது நாளாக
## பல்வைத்தியர்வேலைநிறுத்தம் நோயாளர் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

அரசினர் ஆஸ்பத்திரிகளில் பல்வைத்தியப் பிரிவில்கடமையாற்றும் வைத்தியர்கள் ஆயிரம் ரூபா இடைக்காலப் படி வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை வலியுறுத்தி இன்று ஏழவாது நாளாகவேலை நிறுத்தம் செய்து வருகின்றனர்.

இவ்வேலை நிறுத்தத்தினால் யாழ். ஆஸ்பத்திரி உள்ளிட்டு சகல அரசினர் ஆஸ்பத்திரிகளின் வெளிநோயாளர் பல்வைத்தியப் பிரிவுகள் மூடப்பட்டிருந்தன.

இடைக்காலப் படியாக1000 ரூபா வழங்க வேண்டுமென்று மந்திரிசபை அங்கீகாரம் வழங்கியிருந்தும் சுகாதார அமைச்சு அப்படியைவழங்க மறுக்கிறதாக பல்வைத்தியர்கள் கவலை தெரிவிக்கிறார்கள். [மா]

## ரூ. 50,000 நகை, வாகனம் கொள்ளை!

(வல்வெட்டித்துறை)

வீடொன்றுக்குள் புகுந்த இனந்தெரியாத சில நபர்கள் துப்பாக்கிமுனையில் வீட்டிலிருந்தவர்களைப் பயமுறுத்தி தாலிக்கொடி உட்பட சுமார் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளையும் 'ஹைஏஸ்' வான், மோட்டார் சைக்கிள் ஆகியவற்றையும் கொள்ளை அடித்துள்ளனர்.

தொண்டமானாறு - காட்டுப் புலத்திலுள்ள வேலும்மயிலும் என்பவர் வீட்டில் இக்கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

## இப்படி தண்டனை

[யாழ்ப்பாணம்]

கடந்த மூன்று வருடங்களாக 'பிற்பொக்கட்' அடிக்கும் இளைஞர் ஒருவர் தலைமுடி வழிக்கப்பட்டு மொட்டைத் தலையுடன் மின்கம்பத்தில் கட்டப்பட்டிருந்தார்.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் புதிய சந்தைக் கட்டிடங்களுக்கு முன்பாகவுள்ள மின் கம்பத்தில் நேற்று முன்தினம் கட்டப்பட்டிருந்த இந்த இளைஞர் கிளிநொச்சியைச் சேர்ந்த அப்புத்துரை மகேந்திரம் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

இவருடன் சேர்த்துக்கட்டப்பட்டிருந்த அட்டையில் தமிழ் ஈழதீவிரவாதிகள், (ரி.ஈ.எல்.ஈ.) இத்தண்டனையை வழங்கியுள்ளதாகக் குறிக்கப்பட்டிருந்தது. [ஐ]

## திறப்புவிழாவும் பரிசளிப்பு விழாவும்

[யாழ்ப்பாணம்]

'ஏழூர் அரங்கு' என்னும் இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலய அரங்கு திறப்புவிழா 27 ம் திகதி வியாழக்கிழமை [நாளை] மாலை நடைபெறவுள்ளது. இத்திறப்புவிழாவைத் தொடர்ந்து மகாவித்தியாலயப் பரிசளிப்பு விழாவும் இடம்பெறவுள்ளது.

இவ்விழாக்களில் வடமாநில கல்வி அதிபதி திரு. ம சிமியாம்பிள்ளையும் சிறப்பு விருந்தினராக காங்கேசன்துறை வ. க. அதிகாரி திரு பொ. சிவஞானசுந்தரமும் கலந்துகொள்வர். திருமதி ஜெயமணி சிமியாம்பிள்ளை பரிசில்களை வழங்குவார்.

இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கமே 'ஏழூர் அரங்கு' என்னும் இந்த அரங்கினை அமைதது உதவியுள்ளது. [ப]


யாழ். மக்களுக்கு
ஓர் நற்செய்தி

வெளிநாட்டுப் பயணத்திற்கான
விமான டிக்கட்டுகள், பாஸ்போட்,
விசா, பிரயாணிகள் காசோலைகள்
மற்றும் பிரயாணங்களுக்குத் தேவையான
சகல ஒழுங்குகளும் செய்துதரப்படும்.

தொடர்பு கொள்ளுங்கள்:

விஜயமாலா ரவல்ஸ்,
213, 215, செட்டியார் தெரு, கொழும்பு - 11.
தொலைபேசி: 547205

நேரில் தொடர்புகொள்ள முடியாதவர்கள்
யாழ்ப்பாணத்தில் தொடர்புகொள்ளவேண்டிய விலாசம்:

திருமதி சி. சுஜமுகலிங்கம்,
ரஜனி நிலையம், ஊரியாட்டி, சுன்னாகம்.

9315

சந்திமார்க் எவர்சில்வர் பாத்திரங்களை
தொழிற்சாலை விலையிலிருந்து
5% தொடக்கம் 15% வரையிலான
விலைக்கழிவுடன் பெற்றுக்கொள்ள
தவறாது நாடுங்கள்

செல்லா சன்ஸ் சேல்ஸ் சென்ரர்
118, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(கடைத்தெரு பிள்ளையார் கோவிலருகாமை)

பிரயாண ஒழுங்கு
ஜேர்மனி பிரான்ஸ்
இத்தாலி

ஆகிய நாடுகளுக்கான
உடனடிப் பிரயாணம்

பங்குனி 13-ம் திகதி எமது முகவர்
உங்களை அழைத்துச் செல்வார்.

கனடா போவதற்கான உடனடி பிரயாண ஒழுங்குகளும் செய்துதரப்படும். மத்திய கிழக்கு நாடுகளில் ஆண், பெண் இருபாலாருக்குமான வருமானத்திற்கான ஒழுங்குகளும் உடனடியாக செய்து தரப்படும்.

அத்துடன் வெளிநாட்டு டிக்கட்டுகள், பாஸ்போட் பொன்ட் [BOND] முதலியனவும் துரிதகதியில் செய்துதரப்படும்.

GROUP ATLANTIC TRAVELS
(சிங்கள மகாவித்தியாலயம் முன்பாக)
163, Hospital Road, Jaffna.

A-292


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விண்ணப்ப அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம் மலாயா பென்னுங்கைச் சேர்ந்த இராஜரட்ணம் மகள் பவளாம்பிகாதேவி உடைய மரணசாசனமில்லா மரணச்சொத்து சம்பந்தமாக.

வழ. இல.
மரணச்சொத்து நியாயாதிக்கம் } 3950

இன்னும்

1977ம் ஆண்டு 20ம்இலக்க குடியியல் நடைமுறைக் கோவையின் திருத்தச் சட்டத்தின் 554 [U] பிரிவின் கீழ் வெளிநாட்டு நிர்வாகத் தத்துவப்பத்திரத்தை அங்கீகரிப்பதற்கும், கீழ் இலச்சனை இடுவதற்குமான விடயம்,

இன்னும்

1983ம் ஆண்டு மே மாதம் 3ம் திகதி பென்னுங்கிலுள்ள மலாயா மேல்நீதிமன்றத்தால் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக அளிக்கப்பட்ட நிர்வாக தத்துவப் பத்திரம்பெற்ற இராஜரட்ணம் விவேகானந்தாவின் அற்றேனித் தத்துவக்காரரான கந்தசாமி குணபாலன் சங்குவேலி வடக்கு மானிப்பாய்

— விண்ணப்பகாரர்.

இத் திகதியிலிருந்து 14 நாட்களுக்குப் பின்பு யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்திற்கு மேற்குறிப்பிட்ட பென்னுங் மலாயா வாசியான இராஜரட்ணம் மகள் பவளாம்பிகாதேவியின் மரணசாசனமில்லா மரணச்சொத்து நிர்வாகம் ஏற்கப்பட்டு 1983ம் ஆண்டு மே மாதம் 3ம் திகதி 78ம் இலக்கம்கொண்ட மரணச்சொத்து நிர்வாக தத்துவ பத்திரத்தை 1977-ம் ஆண்டு 20ம் இலக்க குடியியல் நடைமுறைக் கோவையின் திருத்தச்சட்டத்தின் 554 (U) பிரிவின் கீழ் இந் நீதிமன்றத்தின் இலச்சனையிடுவதற்கு ஓர் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படுகின்றது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

1986ம் ஆண்டு மாசிமாதம் 10ம் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி,
கு. குலசிங்கம்
பதிவாளர்

வரைவு:
திருமதி லிங்கா துரைராஜா
விண்ணப்பதாரரின் சட்டத்தரணி.

C 885

# திருமலை அகதிகளின் குறைகளை 'தொண்டா' அறிந்தார்

(கொழும்பு)

திருமலையிலுள்ள அகதி முகாம்களுக்கு வெளிநாட்டுத் தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகள் செல்லமுடியாமலிருப்பதை நிறுத்த உடனடியாக நடவடிக்கைகள் எடுப்பதாக கிராமியக் கைத்தொழிலமைச்சர் திரு. எஸ் தொண்டமான், தம்மைச் சந்தித்த திருமலை இந்து இளைஞர் பேரவையிடம் உறுதியளித்துள்ளார்.

கொழும்பில் நடந்த இச்சந்திப்பில் திருமலை பிரஜைகள் குழுசார்பில்திருவாளர்கள்கே. சிவபாலன், செ. சிவபாதசுந்தரம், செ. சிவலிங்கம், செ. சிறிதரன், மு. கோணமலை ஆகியோர் பங்குபற்றினர்.

இச்சந்திப்பில். திருமலை மாவட்டத்தில் ஊர்காவல் படையினரின் அத்துமீறல், பூஸ வில் விசாரணையின்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ள இளைஞர்களின் நிலைபோன்றவை ஆராயப்பட்டன.

மூதூர் சட்டைபறிச்சன் அகதி முகாம்களின் உணவு விநியோகத்தைச் சீராக்கத் தான் உயரதிகாரிகளிடம் கதைத்து உடனடி நடவடிக்கைகள் எடுப்பதாகவும், கைது செய்யப்பட்ட இளைஞர்களினது நிலைபற்றியும் உடனடி நடவடிக்கை எடுப்பதாகவும அமைச்சர் உறுதியளித்தார் அத்துடன் கலவரங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்குவதுபற்ற சம்பந்தப்பட்டவர்களிடம் கதைப்பதாகவும் அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

## விளையாட்டுப் போட்டி

[யாழ்ப்பாணம்]

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி இல்லவிளையாட்டுப் போட்டி இன்று புதன் கிழமை கல்லூரி அதிபர் நா. வேலுப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக பாடசாலை வித்தியாலய பிரதம உடற்கல்வி அதிகாரி தங்கராசா கலந்து கொள்வார், வெற்றிபெற்றோருக்கான பரிசில்களை கல்லூரி உப அதிபர் திரு. ப. சர்வேஸ்வரஐயர் வழங்குவார்

## வாலிபர் மர்ம மரணம்! சடலம் கரை ஒதுங்கியதாம்

(பண்டத்தரிப்பு)

கடலில் மீன்பிடிக்கக் கட்டுமரமொன்றில் இரவுவேளையில் சென்று காணாமல் போய்விட்ட மாதகலைச் சேர்ந்த வாலிபர் ஒருவரின் சடலம் காரைநகர் கோவளம் பகுதியிலுள்ள கடற்கரையிலிருந்து மீட்கப்பட்டது.

மாதகல்துறையைச் சேர்ந்த 'அருமை' என்றழைக்கப்படும் அந்தோனிமுத்து சகாயநாதன் என்னும் 26 வயதுடைய இந்த வாலிபர் காணமற்போனதையடுத்து கடலில் பல இயந்திரப்படகுகளில் உறவினர்கள் தேடுதல் நடத்தியபோது காரைநகர் கோவளம் கடற்கரையில் இவரது சடலப் ஒதுங்கிய நிலையில் கண்டெடுக்கப்பட்டது.

இவரின் மரணம் எவ்வாறு சம்பவித்தது என்ற விபரம் இதுவரை மர்மமாகவே இருப்பதாகத்தெரிவிக்கப்படுகின்றது

இவரது இளையசகோதரர் ஒருவரும் கடந்த ஆண்டில் கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி கடலில் மரணமடைந்தது குறிப்பிடத்தக்கது.

## கைலாசபதி அரங்கில் இன்று "விமானங்கள் மீண்டும் வரும்"

[யாழ்ப்பாணம்]

நெல்லை க. பேரன் எழுதிய 'விமானங்கள் மீண்டும் வரும்' குறுநாவல் அறிமுக விழா இன்று பிற்பகல் 2-00 மணிக்கு யாழ் பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

தமிழ் மன்றத்தலைவர் செல்வன் சு மணிவண்ணன் தலைமைவகிப்பார். யாழ் றெலிகுளோப் அதிபர் திரு ம சிவராஜா நூலின்முதற்பிரதியைப் பெற்றுக்கொள்வார். பேராசிரியர் அ. சண்முகதாஸ், கலாநிதி நா. சுப்பிரமணியன், கலாநிதி சி. மௌனகுரு, கலாநிதி சோ. கிருஷ்ணராஜா ஆகியோர் ஆய்வுரைகளை நிகழ்த்துவர்.

செல்வி கலாநிதி சண்முகநாதபிள்ளை வரவேற்புரையும் செல்வன் செ. சக்திதரன் நன்றியுரையும் நிகழ்த்துவர்.

இரசிகமணி கனக செந்திநாதன் ஞாபகார்த்தமாக 'ஈழநாடு' நிறுவனமும் யாழ். இலக்கியவட்டமும் நடாத்திய குறுநாவல் போட்டியில முதற்பரிசுபெற்ற நாவல்களுள் இதுவுமொன்று என்பது குறிப்பிடத்தக்கது.

## காயமடைந்தவர் மரணமானர்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி ரயில் நிலையத்தில் கடந்த ஜனவரி 25-ம் திகதி பிற்பகல் 2 மணிக்கு இடம்பெற்ற துப்பாக்கச் சூட்டுப் படுகொலைச் சம்பவத்தில் காயமடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவந்த முத்துச்சாமி தங்கம்மா (62-வயது) என்பவர் மரணமானர்.

இவரின் மரணவிசாரணை யாழ் ஆஸ்பத்திரியில் மரணவிசாரணை அதிகாரி க. கேசவன் முன்னிலையில் நடைபெற்றது.

கிளிநொச்சி கூப்பன் கடைக்கு அருகாமையில் வசித்து வருபவர் என்றும், அனாதையாகத் தனித்து வாழ்ந்தவர் என்றும் பொலிசார் தெரிவித்ததைத்தொடர்ந்து மரண விசாரணை அதிகாரி பிரேத பரிசோதனை செய்தபின்னர் அரச செலவில் அடக்கம் செய்யும்படி உத்தரவிட்டார்.

(மா)

## பனை அபிவிருத்திக்கு ரூ. 1,50,000 ஒதுக்கீடு

[வண்ணார்பண்ணை]

கிளிநொச்சி மாவட்ட பிரதேச அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் இப்பகுதியின் பனைவளஅபிவிருத்தி நடவடிகைகளுக்கென, கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் இவ்வாண்டு டன்முக நிதியிலிருந்து ஒருலட்சத்தி ஐம்பதினாயிரம் ரூபா வழங்கியுள்ளார்.

இந்தநிதியுதவியில் கிளிநொச்சிப்பகுதியில் பனந்தும்பு பதனிடும் தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்கான நடவடிக்கைகளை பனை அபிவிருத்திச்சபை மேற்கொண்டுள்ளது.

இத்தொழிற்சாலைக்கானகட்டிட அமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக. பனை அபிவிருத்திச்சபையின் பொது முகாமையாளர் கலாநிதி எஸ். மோகனதாஸ் தெரிவித்தார்.

வடபகுதியில் கொள்வனவு செய்யப்படும் பனந்தும்பை பதனிட்டு, தரம் பிரித்து விற்பனை செய்ய இந்தத்தொழிற்சாலைபயன்படும என்றும் அவர் தெரிவித்தார்.

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## "ஒவ்வொருவரும் சுருக்கெழுத்து பயின்றிருப்பது அவசியம்"

[புலோலி]

"கிராமங்கள் தோறும் பாலர் பாடசாலைகள், முதலுதவிப் பயிற்சி நிலையங்கள் செயல்படுவதுபோல் சுருக்கெழுத்து பயிற்சிநிலையங்களும் அமைக்கப்பட்டு சுருக்கெழுத்துக் கலையும் வளர்க்கப்படவேண்டும். வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தின் இலட்சியமும் இதுதான்."

இவ்வாறு வடமராட்சி சுருக்கெழுத்துக்கழகத்தின் பொதுக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கி உரையாற்றிய கழகத்தின் பிரதம அமைப்பாளர் திரு வ சிவச்சந்திரதேவன் கூறினர். தொடர்ந்து அவர் பேசுகையில் "சுருக்கெழுத்துக்களைப் பயிலும் மாணவ, மாணவிகள் இறுதிப் பரீட்சை முடிந்ததும் சுருக்கெழுத்துப் பயிற்சிகளைச் செய்து கொள்வதை நிறுத்திவிடக் கூடாது தொடர்ந்தும்பயிற்சி செய்து வரவேண்டியது முக்கியமாகும். ஒவ்வொருவரும் சுருக்கெழுத்துக்களைப் பயின்றிருக்கவேண்டியது அவசியமாகும். வாழ்க்கையின் உயர்ச்சிக்குச் சுருக்கெழுத்துக் கலை பல்வேறு வகைகளிலும் உதவுகின்றது" என்ருர்.

இதையடுத்து இடம்பெற்ற நடப்பாண்டு நிர்வாகிகள் தெரிவில்: தலைவராகச் செல்வி மாலினி கந்தவனமும், செயலாளராகச் செல்வி சசிகலதேவி ஆனந்தவடிவேலு பொருளாளராகச் செல்வி பத்மராதா, கந்தையாவும். செயற்குழு உறுப்பினர்கள் தெரிவி. செல்வி. பாலநந்தினி பரஞ்சோதி, செல்வி தவமலர் விஸ்வலிங்கம், செல்வி உமா ஆறுமுகசாமி, செல்வி. இராசலட்சுமி, இராசையா, செல்வி. இந்திராணி, [illegible]ம்பிரராஜா, செல்வி. வசந்தமலர் தில்லை நடாராஜா ஆகியோர் தெரிவாகினர்.

# வினை விதைத்தவர் வினை அறுத்தார்!

[பண்டத்தரிப்பு]

செய்வினை, சூனியம் ஆகிய மாந்திரீகவேலைகளில் ஈடுபட்டு வந்ததாக கூறப்படும் நபர் ஒருவர் மொட்டை அடிக்கப்பட்ட நிலையில் பண்டத்தரிப்பு பகுதியில் ஊர்வலமாக கொண்டுசெல்லப்பட்டார்.

பிரான்பற்று விழிப்புக்குழுவினர் இப்பகுதியில் இந்த நபர் செய்வினை, சூனியம் ஆகியவற்றில் ஈடுபட்டு கிராம மக்களிடம் பணம் பறித்து வருவதாக அறிந்து அவரை கைதுசெய்து விசாரணை செய்தனர்.

இவர் பணம் வாங்கிக் கொண்டு, செய்வினை செய்து கொடுத்து வந்ததாக விசாரணையின்போது ஒப்புக்கொண்டாராம்

இவரது கழுத்தில் தொங்க விடப்பட்டிருந்த 'காட்போர்ட்' அட்டையில் 'சாவகச்சேரி மறவன்புலோவைச் சேர்ந்த திருஞானசெல்வம் ஆகிய நான் மக்களை பேய் பிசாசு என்று ஏமாற்றி செய்வினை சூனியம் செய்துகொடுத்ததை ஏற்றுக்கொள்ளுகின்றேன்" என்ற வாசகம் காணப்பட்டது. இவர் பண்டத்தரிப்பு பஜார் வீதி வழியாக பிரான்பற்று விழிப்புக் குழுவினரால் ஊர்வலமாக கூட்டிச்செல்லப்பட்டார். பெருந்தொகையான பொதுமக்கள் இதனைப் பார்வையிட்டனர்.


## அறிவித்தல்

வாடிக்கையாளர்களுக்கும் நண்பர்களுக்கும் அறியத்தருவது; எனது வாசஸ்தலத்தை கடைச்சாமி வீதியிலிருந்து இப்போது யாழ்ப்பாணம் ஈழநாடு காரியாலயத்துக்கு அருகில் உள்ள 65, மானிப்பாய் வீதிக்கு மாற்றிக்கொண்டேன்.

**P. S. ஐயர்**
உத்தரவு பெற்ற உலாந்தா
(நில அளவையாளர்)

(A 294)


## மானிப்பாய் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க அறிவித்தல்

கல்லூரி பவளவிழா தொடர்பாக 28-2-86, 1-3-86, 2-3-86 தினங்களில் நடைபெறவிருந்த நிகழ்ச்சிகள் தவிர்க்கமுடியாத காரணங்களால் பின்போடப்பட்டுள்ளன என்பதை மனவருத்தத்துடன் அறியத் தருகிறோம். நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

S. பத்மநாதன்,
செயலாளர்.

(C 956)

## இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலய ஏழூர் அரங்கு திறப்புவிழா

மெய்கண்டான் மக வித்தியாலய ஏழூர் அரங்கு திறப்புவிழா 27-2-86 வியாழக்கிழமை மாலை 5-30 மணிக்கு நடைபெறவுள்ளது.

பழைய மாணவர்கள் அன்பர்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

(C 955) அதிபர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

## இன்று அபிவிருத்திக் கண்காட்சி

[யாழ்ப்பாணம்]

யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரியில் கடந்தமூன்று நாட்களாக நடைபெற்று வந்த யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான மன்ற அபிவிருத்திக் கண்காட்சி பாடசாலை மாணவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க இன்றும்காலை 9 மணி முதல் பி. ப. 3 மணிவரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## 'அந்தக்' குண்டு இதுதான்!



[யாழ்ப்பாணம்]

தாவடியில் கடந்தபுதன் கிழமை நிகழ்ந்த விமானக் குண்டுவீச்சின்போது உரும்பராயில் கண்டெடுக்கப்பட்டு யாழ். நகரில் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்ட 'அந்தக்' குண்டு இதுதான்! சுமார் நாலரை அடி உயரமான இந்தக் குண்டின் சுற்றளவு ஒன்பது அங்குலமாகும். ஐம்பத்தைந்து கிலோ எடையுள்ள இக்குண்டு வெடித்திருந்தால் சுமார் இருநூறு மீற்றர் சுற்றளவுத் தூரம் பாதிக்கப்பட்டிருக்குமென்று மதிப்பிடப்பட்டது.

# "தனி மனித சுதந்திரத்திற்கு மதிப்பளிக்கவேண்டும்"

[யாழ்ப்பாணம்]

"தாய்மண்ணின் சுதந்திரத்தைப் பாதுகாக்கப் புறப்பட்டவர்கள் முதலில் தனிமனித சுதந்திரத்திற்கு மதிப்பளிக்க வேண்டும் தனிமனித சுதந்திரம் மதிக்கப்படாமல் மிதிக்கப்படும் வரைக்கும் தாய் மண் சுதந்திரம் ஒருபோதும் மலரப்போவதில்லை"

இன்றைய துப்பாக்கிமொழி நாளைய எம் தாய்மொழியா? என்ற தலைப்பில் நேற்றுத் 'தமிழ் மாணவர்கள்' வெளியிட்ட துண்டுப்பிரசுரத்தில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துண்டுப் பிரசுரத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

கடந்தகால படிப்பினை வடுக்கள் எம் இனத்தின் மனத்தை விட்டு இன்னமும் ஆறாமல் இருக்கும் இன்றைய சூழ்நிலையில், ஐக்கியத்தின் அவசியத்தை மீண்டும் நினைவூட்டவோ அல்லது அதற்குப் புது விளக்கம் கொடுக்கவோ வேண்டிய அவசியமில்லை. ஏனெனில் தமிழ் மக்களின் ஐக்கியத்தின் அவசியத்தை மட்டுமன்றி அவசரத்தையும் ஒரு சாதாரண பாமர மகன்கூட இன்று விளக்கம்கொடுக்க தயாராக இருக்கிறான். இந் நிலையில் களத்திலஉள்ள சில உள்ளங்கள் முரண்பட்டு "துப்பாக்கி மொழி" பேசுவதை எம்மால் கண்டிக்காமல் இருக்கமுடியாது.

"ஆத்திரக்காரனுக்கு புத்தி மத்திமம்" என்பது ஒரு சாதாரண அறிவுடைய பொதுமகனுக்குப் பொருந்துமேயன்றி போராட்டத்தின் பல படிமுறை வளர்ச்சிகளைத்தாண்டி வந்திருக்கும் முதிர்ச்சியடைந்த போராளிகளுக்குப்பொருந்தாது. போராளிகளிடையே வேகம் மட்டுமன்றி விவேகமும் இருக்குமென்பதே எங்களின் எதிர்பார்ப்பு!

ஆனால் இன்று வெகுஜனங்களே வெருண்டெழுந்து வெறுப்படைவதற்கு இடம் பெயருகின்ற அளவுக்கு நிகழும் இயக்க முரண்பாட்டு மோதல்களும் இயக்கப் படுகொலைகளும் எதிரிக்கு எம்மினத்தை இழிவான கண்ணோட்டத்தோடு பார்க்க வைப்பதோடு எம்வீரத்தை நாமே மலினப்படுத்துவதாகவும் அமைகின்றது. உள்ளக ஆதரவையும் இழக்க வழிவகுக்கின்றது.

"இங்கு நடக்கும் எந்தவொரு 'நிகழ்வும்' வெளிநாட்டில் எம்போராட்டத்திற்கு பிரசாரமாகஅமையும்" என்ற கூற்றில் முற்றுமுழுதாக நம்பிக்கை வைத்திருக்கும் நீங்கள், இந்த இயக்க முரண்பாட்டு மோதல்களை எந்தக் கண்ணோட்டத்தில் பார்க்கிறீர்கள். பூச்சியத்திலிருந்தே ஒன்றை உருவாக்கும் அல்லது ஒன்றைப் பத்தாக்கும் அரச பிரசாரத்திற்கு புள்ளி விபரம் கொடுக்கிறீர்களா"

## அக்கினோ---

[1ம் பக்கத் தொடர்ச்சி]

நேற்றிரவு அவர் நாட்டை விட்டு வெளியேறியதை பிலிப்பைன்ஸ் மக்கள் மிகவும் குதூகலமாகக் கொண்டாடினர்.

(முன்வந்த செய்தி)

பிலிப்பைன்ஸின் ஜனாதிபதி யார் என்று மக்கள் குழம்பிக்கொண்டிருக்கும் அதேநேரத்தில், திரு. மார்க்கோஸும் திருமதி அக்கினோவும் தனித் தனியாக, ஜனாதிபதியாகப் பதவிப்பிரமாணம் எடுத்துள்ளனர்.

திருமதி அக்கினோ, மணிலாவுக்கு அருகில் பிலிப்பைன்ஸ் உயர் நீதிமன்ற நீதியரசர் முன்பாக ஜனாதிபதியாக சத்தியப் பிரமாணம் செய்துகொண்டு இடைக்கால அரசாங்கத்தையும் அமைத்துள்ளார்.

இதே நேரத்தில் திரு. மார்க்கோஸ் ஜனாதிபதி மாளிகையில் பிரதம நீதியரசர் முன்பாக ஜனாதிபதியாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

மார்க்கோஸின் மைத்துனரும் பிலிப்பைன்ஸ் இராணுவ பீடத்தின் துணைமுதல்வருமான திரு. றமோஸ், தனக்கு ஆதரவுஅளிக்கும் படைவீரர்களைக் கொண்ட கடற்படையும் திருமதி அக்கினோவை ஜனாதிபதியாக்கும் முயற்சிக்குத் துணை நின்றதாகத் தெரிவித்தார்.

வில்லாமோ விமானத்தளத்தில் மார்க்கோஸுக்கு ஆதரவான இராணுவப்படை வீரர்களுக்கும் திருமதி அக்கினோவுக்கு ஆதரவளிக்கும் படை துடுப்பாட்டக் காரர்களான வீரர்களுக்குமிடையில் இன்னும் சமர் நடைபெறுவதாகக் கூறப்படுகின்ற வேளையில் அமெரிக்கா ஒட்டுமொத்தமாகவே மார்க்கோஸுக்கான உதவியை 'கைகழுவி' விட்டது

அமெரிக்கராஜாங்க இலாகா வெளியிட்ட அறிக்கைகளின் படி நிலைமைகளை நன்கு ஆராய்ந்த பின்னர் மார்க்கோஸ் தமது பதவியினைத் துறப்பதும் ஆட்சியதிகாரத்தைத் திருமதி அக்கினோவிடம் கையளிப்பதுமே நியாயமானது என்று அமெரிக்க ஜனாதிபதி றீகன் வெளிப்படையாக கருத்து வெளியிட்டுள்ளார்.

## இணக்க சபை விசாரணைகள்

(புலோலி)

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெற்றுவந்த பருத்தித்துறை இணக்க சபையின் விசாரணைகள புலோலி வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றுவருவதாகப் பருத்தித்துறை இணக்கசபைத் தலைவர் திரு எஸ் வயிரவிப்பிள்ளை அறிவித்துள்ளார்.

பருத்தித்துறையில் நிலவிவரும் பதற்றத்தை யடுத்து பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை புலோலி பநலச்சேவை நிலைய மண்டபத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டதைத் தொடர்ந்தே பருத்தித்துறை இணக்க சபை வேலாயுதம் மகா வித்தியாலய மண்டபத்திற்கு விசாரணைகளை இடம்மாற்றியுள்ளது.

## நாளைய ஊர்வலத்தில் படுகொலைகளைச் சித்தரிக்கும் ஊர்தியும் இடம்பெறும்

[யாழ்ப்பாணம்]

நெடுந்தீவில் "குமுதினி" படகில் 36 பேர் படுகொலை செய்யப்பட்ட சம்பவங்களைச் சித்தரிக்கும் ஊர்தி ஒன்றும் நாளை யாழ். நகரில் நடைபெறவிருக்கும் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் இடம்பெற இருக்கிறது.

ம்பார் விமானம் குண்டு வீசியபோது தாவடிப்பகுதியில் ஏற்பட்ட தாக்குதல் சம்பவங்களைக் கொண்ட ஊர்தி ஒன்றும் இந்தஊர்வலத்தில் இடம் பெறவிருப்பதாக வெகுஜன போராட்ட குழு உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

யாழ். வர்த்தக சங்கத்தினரின் ஊர்தி ஒன்றும், சங்கிலியன் புனர்வாழ்வுக் கழகத்தின் ஊர்தி ஒன்றும் இந்த ஊர்வலத்தில் இடம்பெறும்.

திருமலையிலிருந்து அகதிகளாக இங்கு வந்துள்ள நூற்றுக்கு மேற்பட்ட குடும்பங்களும் இந்த ஊர்வலத்தில் கலந்துகொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இவர்கள் அகதிமுகாம்களிலிருந்து அன்றுகாலை யாழ். சிவன்கோவிலடிக்கு வந்து ஊர்வலத்தில் பங்குபற்றுவார்கள், [க]

## அக்கரையிலும் அடிபடும் அக்கரைப்பற்று!

[லண்டன்]

அம்பாறை மாவட்டத்திலுள்ள அக்கரைப்பற்று உடும்பன் குளத்தில் நிகழ்ந்த படுகொலைச் சம்பவம் பற்றிய செய்திகள் லண்டனிலும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

லண்டனின் பிரபல பத்திரிகைகளான 'லண்டன் ரைம்ஸ்' 'லண்டன் ரெலிகிராப்' முதலான பத்திரிகைகள் அக்கரைப்பற்று படுகொலைச் சம்பவத்துக்கு மிக முக்கியத்துவமளித்துச் செய்திகள் வெளியிட்டிருக்கின்றன. [ய-பி]

## புதியகட்டடம் இன்றுதிறப்புவிழா

[யாழ்ப்பாணம்]

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி புதிய கட்டிடத் திறப்புவிழாவும், திருவள்ளுவர் விழாவும் இன்றுகாலை கல்லூரி அதிபர் க. சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது. [பி]

## மரண அறிவித்தல்

### திருமதி பாபரு பொன்னம்மா சூசைப்பிள்ளை

இளவாலை திருமதி பாபரு பொன்னம்மா சூசைப்பிள்ளை காலமானார். இவர் காலஞ்சென்ற பஸ்தியாம்பிள்ளை செல்லையா தம்பதியரின் அருமை மகளும், திரு சவரிமுத்து சூசைப்பிள்ளையின் அன்பு மனைவியும், யசிந்தா (லண்டன்), காலஞ்சென்ற சீலன், றடணு (தமிழ்நாடு) ஆகியோரின் அருமைத் தாயாரும், டாக்டர் இம்மானுவல் சேவியர் (லண்டன், மனேச்சர் இராசநாயகம் (பரிஸ்), ருஜி (மக்கள் வங்கி, மன்னார்) ஆகியோரின் அருமை மாமியாரும், யசோதரா (லண்டன்), ஜானகி (லண்டன்), சுறேஸ், சுஜி, சுறேன் ஆகியோரின் அருமைப் பேத்தியும், றெபேட் கிளைவ், மரியநாயகம், ஜெயராஜா, காலஞ்சென்ற செல்வரத்தினம், காலஞ்சென்ற கிராம சேவையாளர் இராசநாயகம் (பிரான்சீஸ்), செல்வநாயகம், ஜெயராணி, காலஞ்சென்ற சவுந்தரம் அமிர்தநாயகம் அழகக்கோன், ரத்தினம், அற்புதம், காலஞ்சென்ற சவுந்தரநாயகம் ஆகியோரின் அருமைச் சகோதரியும், காலஞ்சென்ற திருமதி நீக்கிலாப்பிள்ளை, அந்தோனிப்பிள்ளை ஆகியோரின் மைத்துனியுமாவார். அன்னாரின் ஈமைக்கிரியைகள் 27-2-86 வியாழக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு இளவாலையில் இடம்பெறும்.

சல்லூரி ஒழுங்கை,
இளவாலை.

# பெண்கள் ஹொக்கி போட்டி இன்று நடக்கிறது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் முதல் தடவையாக பெண்கள் ஹொக்கிப் போட்டி இன்று நடைபெறுகிறது.

யாழ்ப்பாணத்தில் பெண்களுக்கிடையில் இதுவரை ஹொக்கிப் போட்டிகள் நடைபெற்றதுகிடையாது. இன்று யாழ். இந்து மகளிர் கல்லூரியும், யாழ். வளாக (பல்கலைக் கழக) மகளிர் கோஷ்டியும் மோதிக்கொள்ளும்.

யாழ். வளாக மைதானத்தில் இன்று பிற்பகல் நான்கு மணிக்கு இப்போட்டி நடைபெறுகிறது.

1982-ம் ஆண்டு முதல் தடவையாக யாழ். வளாகம், அகில இலங்கை வளாகங்களுக்கிடையிலான பெண்கள் ஹொக்கிப் போட்டியில் கலந்து கொண்டு இறுதி ஆட்டத்துக்கு தெரிவுசெய்யப்பட்டது.

கொழும்பில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் இரண்டாவதாக யாழ். வளாகக் கோஷ்டி இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. (வி)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 26-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone, 22389, 24126

## லகுகல---

(1-ம் பக்கத் தொடர்ச்சி

படுகொலைச் சம்பவத்தின் போது உயிர்தப்பிவந்த மூன்று பெண்களும், பலியானவர்களின் பெற்றோர், மனைவிமார் உட்பட 20 பேரும் சாட்சியமளித்தனர்.

### இன்று மகாநாடு

மட்டக்களப்பு பிரஜைகள் குழுவும், அம்பாறைபிரஜைகள் குழுவும் இன்று கூடி படுகொலைச் சம்பவம்பற்றிஆலோசனை நடத்தவுள்ளன.

இப்படுகொலைச் சம்பவம் தொடர்பாகப் பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்களோ, பிரஜைகள் குழுக்களோ இது வரை புகார் செய்யவில்லை என்று அரசாங்கம் அறிவித்திருந்தது தெரிந்ததே. (மா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org